## பகுதி - 1 வழிபாட்டு வழிகாட்டி

**03.04.2016 பாஸ்கா காலம் இரண்டாம் ஞாயிறு திருப்பலி**

திரு DVR. ராஜா

**முன்னுரை**

இன்று உயிர்ப்பு காலத்தின் இரண்டாம் வாரம் மாதத்தின் முதல் ஞாயிறு. இறை இரக்க ஆண்டவரின் திருநாள் இறைவனின் திருவுளத்தை இம்மியளவும் பிசகாமல் இறைசித்தம் நிறைவேற்றி அவமானத்தின் அடையாளமான சிலுவையை, மதிக்கத்தக்கதும் புனித சின்னமாக மாற்றி பிறக்கும் ஒவ்வொரு கிறிஸ்தவருக்கும் நெற்றியில் அடையாளம் வரைந்து கழுவி கிறிஸ்துவுக்குள் நுழையும் முறைமையை ஏற்படுத்திய இயேசு கிறிஸ்து நம்முள் வீற்றிருக்கிறார். கடந்த வாரம் நம் திருமுழுக்கு வாக்கைப் புதுப்பித்தோம். இதை நம் வாழ்நாள் முழுவதும் பிரதிபலிக்கச் செய்வோம். உயிர்த்த இயேசு இனி மரிப்பதில்லை. அவர் காட்டிய மாதிரியில் தூய ஆவியின் துணையோடு சீடர்கள் இயேசுவைப்போல் அற்புதங்களை நிகழ்த்தி இறையரசை பறைசாற்றினார். இதை தான் இன்றைய வாசகங்களும் நற்செய்தியும் குறிப்பிடுகிறது.

எனவே கைகளிலும் விலாவிலும் என் விரலை விட்டாலொழிய நான் விசுவசியேன் என்று இல்லாது காணாமல் விசுவசிப்பவனே பேறுபெற்றவர் என்ற இயேசுவின் வார்த்தைக்கேற்ப விசுவாசத்துடன் இறையரசை பரப்ப இந்த இறை இரக்க ஆண்டில், இறை இரக்கத் திருநாளாக கொண்டாடும் இன்று, அவரது பேரிரக்கம் பரிபூரணமாய் கிடைக்கப்பெற நாம் இரக்கத்தின் ஆண்டவரை வாழ்த்தி திருப்பலியில் பங்கு பெறுவோம்.

**விசுவாசிகளின் மன்றாட்டு**

1. அன்பின் திருவுருவே இறைவா, உம் பணிக்காக அழைக்கப்பட்ட அடியார்கள் திருத்தந்தை, ஆயர்கள், கன்னியர் மற்றும் இறைப்பணியாளர்கள் அனைவரும் அன்பின் கருவிகளாக விளங்கி தம் மந்தையை நேரிய மற்றும் அன்பின் பாதையில் வழிநடத்த தேவையான அருளையும் ஆசீரையும் அளிக்க இரக்கத்தின் ஆண்டவரே உம்மை மன்றாடுகிறோம்.

2. நீதியின் அரசரே எம் இறைவா, வரப்போகும் தேர்தலில் நல்லதோர் புதிய அரசு அமைந்திடவும் ஆட்சியாளர்கள் தங்கள் பணபலத்தால் எதையும் செய்யலாம் என்று நினையாது நாட்டு மக்களுக்கு நலன்தரும் வகையில் பணியாற்றிடவும், துன்பப்படும் மக்களின் வாழ்க்கைத் தரம் உயரவும் சர்வதேச அரங்கில் நாடு முன்னேற்றம் காணவும், விளைச்சல் செழிக்கவும் இரக்கத்தின் ஆண்டவரே உம்மை மன்றாடுகிறோம்.

3. திவ்ய திருவுணவே இறைவா, இளைஞர் இளம் பெண்கள் சீரிய சிந்தனையும் தொலைநோக்கு பார்வையும் கொண்டு தங்கள் எதிர் காலத்தை அமைத்துக்கொள்ள சமுதாய நடத்தைகளிலும், செயல் திறனிலும், தனித்துவம் பெற பெரியவர்களின் அனுபவங்களையும், தங்கள் முயற்சிக்கு பயன்படுத்தி கிறிஸ்துவின் துணையோடு வாழ்வில் உயர எடுக்கும் எல்லா முயற்சிகளையும் உமது இரக்கத்தினால் நிறைவேற்ற வேண்டுமென்று இரக்கத்தின் ஆண்டவரே உம்மை மன்றாடுகிறோம்.

4. நம்பிக்கையின் ஊற்றே இறைவா, பங்கு மக்கள் அனைவரின் தேவைகள் யாவும் நிறைவேறவும், பாதுகாக்கவும், நன்முயற்சிகள் அனைத்தும் வெற்றிபெறவும், குடும்பங்களில் சமாதானம் நிலைபெறவும், சாதி பாகுபாடுகள் விலகவும், நோயுற்றோர் குணம் பெறவும், உம் இரக்கம் தேவைப்படும் எளியவர்களுக்கு உம் ஆசீர் கிடைக்கப்பெறவும் இரக்கத்தின் ஆண்டவரே உம்மை மன்றாடுகிறோம்.

**04.04.2016 கிறிஸ்து பிறப்பு முன்னறிவிப்பு பெருவிழா திருப்பலி**

திருமதி ராணி சம்பந்தன்

**முன்னுரை**

இறையேசுவில் பிரியமான இறைமக்களே, தந்தையாகிய இறைவன் தன் ஒரே பேரான மகனை நம் பாவத்தின் நிமித்தம் இவ்வுலகிற்கு அளிக்க சித்தம் கொண்டதன் விளைவாக வந்ததுதான் கிறிஸ்து பிறப்பின் அறிவிப்பு. இறைவாக்கினர் எசாயா கடவுளின் அடையாளத்தை இவ்வாறு வெளிப்படுத்துவார். "இதோ கருவுற்றிருக்கும் அந்த இளம்பெண் ஓர் ஆண்மகனைப் பெற்றெடுப்பார். அக்குழந்தைக்கு அவள் இம்மானுவேல்" என்று பெயரிடுவார். லூக்கா நற்செய்தியாளர் தனது நற்செய்தியில் 16:16ல் "உங்கள் மீட்பு காலம் நெருங்கி விட்டது" என்கிறார். உலக மீட்பின் திட்டத்தை கிறிஸ்து

பிறப்பின் அறிவிப்பு மையப்படுத்துகிறது. பாவங்களுக்கு பரிகாரமாக எரிபலிகளும், காணிக்கைகளும் உகந்தவையல்ல. என்னையே என் உடலையே உமக்குத் தருகிறேன். உம் திருவுளம் நிறைவேற்றவே வந்தேன் என்று இயேசு கூறுகிறார்.

மார்ச் 25 அன்று கொண்டாடப்படும் இத்திருவிழா இன்று கொண்டாடப்படுகிறது என்று கொண்டாடப்பட்டாலும் அதன் செய்தி நமக்கு என்றுமே உகந்ததாகவே உள்ளது. எத்தனை இன்னல்கள் நமக்கு முன் தோன்றினாலும் இறைவனின் திருவுளத்தை நிறைவேற்ற நாம் தயாராக இருக்கின்றோமா என்பதே அந்த செய்தி. இதே சிந்தனையோடு இன்றைய திருப்பலியில் இணைவோம்.

**விசுவாசிகளின் மன்றாட்டு**

1. பெயர் சொல்லி அழைக்கும் இறைவா, "யாரை நான் அனுப்புவேன், எனக்காக யார் போவார்" என கேட்ட உம் குரலுக்கு, "இதோ நானிருக்கிறேன் அடியேனை அனுப்பும்" என்று மொழிந்த எசாயா இறைவாக்கினர் போன்று, திருத்தந்தை, ஆயர்கள், குருக்கள், இருபால் துறவியர் மற்றும் பொதுநிலையினர் அனைவரும் தம்மை அழைத்த உமக்கு என்றென்றைக்கும் பிரமாணிக்கத்துடன் வாழ்ந்து மக்களின் ஆன்ம ஈடேத்திற்காக தங்களையே அர்ப்பணித்து வாழும் தூய உள்ளத்தை அளிக்க உம்மை மன்றாடுகிறோம்.
2. துயர் துடைக்கும் இறைவா, கணவனால் கைவிடப்பட்டு, பெற்ற பிள்ளைகளால் வஞ்சிக்கப்பட்டு, நோய்வாய்ப்பட்டு, தெருவோரங்களில் கிடக்கும் ஆதரவற்றப் பெண்களுக்காக மன்றாடுகிறோம். இவர்களை காணும் மக்கள் இவர்கள்மேல் கருணைக் கொண்டு, துணிவு கொண்டு, காப்பகங்களில் கருணை இல்லங்களில் கொண்டு சேர்க்கும் நல்ல உள்ளத்தை தந்தருள வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகிறோம்.
3. பாதுகாப்பளிக்கும் இறைவா, நமது இந்திய திருநாட்டின் அனைத்து மக்களையும் அரவணைத்து வழிநடத்தும் அரசியல் நல்லாட்சியுடன் மலர்ந்திட மன்றாடுகிறோம். குறிப்பாக மக்கள்மீது பாரபட்சம் காட்டி அவர்களது சலுகைகளை பறித்து வன்முறைகளை பிரயோகிக்கும் ஆட்சித் தலைவர்களாக இல்லாமல் அனைவரையும் சமமாக மதிக்கும் ஆட்சித்தலைவர்கள் ஆட்சிபீடத்தில் அமர இறைவா உம்மை மன்றாடுகிறோம்.
4. வரமளிக்கும் இறைவா, படிக்கும் பிள்ளைகளுக்காக மன்றாடுகிறோம். தங்களது பிள்ளைகளை வரவுக்கு மீறி படிக்க வைக்கும் பெற்றோர்களை நினைத்து அவர் தம் தியாகத்தை நினைத்து இப்பிள்ளைகள் பெற்றோர்களின் மனங்குளிரும் வண்ணம் கல்வி ஒன்றையே குறிக்கோளாகக் கொண்டு படிப்பில் வெற்றிபெற்று வாழ்வில் முன்னேற வேண்டி இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

**10.04.2016 பாஸ்கா காலம் மூன்றாம் ஞாயிறு திருப்பலி**

திரு ஜீசஸ் மகுட மன்னன்

"மனிதர்களுக்குக் கீழ்ப்படிவதைவிட கடவுளுக்குக் கீழ்ப்படிவதே மேல்"

**முன்னுரை**

மீட்பராம் இயேசு கிறிஸ்து உயிர்த்தெழுந்த மூன்றாம் ஞாயிற்றுக்கிழமையில் இருக்கும் நமக்கு இன்றைய வாசகங்கள் தரும் அழைப்பு, கடவுளுக்குக் கீழ்ப்படிந்து வாழவேண்டும் என்பதாகும். ஏனெனில், வாழ்வும், ஊழியமும், உயிரும் மீட்பும் இயேசு தன்னகத்தே கொண்டிருக்கிறார். திருத்தூதர்கள் இன்று நாங்கள் மனிதர்களாகிய உங்களுக்குக் கீழ்ப்படிவதைவிட ஆண்டவருக்குக் கீழ்ப்படிவதே மேல்" என்று உறுதியுடன் சொல்லி, துணிச்சலுடன் வெளிப்படையாக நற்செய்தியை அறிவிப்பதை இறைவார்த்தை எடுத்தியம்புகிறது.

இறைவனுக்கு முழுமையாக கீழ்ப்படிந்து வாழ்வதே அவரை அன்பு செய்வதன் அடையாளமாகும். நற்செய்தியில் நாம் இறைவனுக்குக் கீழ்ப்படிகின்றவர்களாக இருக்கின்றோம் என்றால் அவரை முழுமையாக அன்பு செய்கிறோம். நாம் ஒருவரையொருவர் அன்பு செய்து அனைத்துலகின் மீதும் அதிகாரம் கொண்ட இறைவனுக்குக் கீழ்ப்படிந்து அவருடைய அருட்கொடைகள் அனைத்தையும் பெற்று வாழ இன்றைய திருப்பலியில் பக்தியுடன் பங்கெடுப்போம்.

**விசுவாசிகளின் மன்றாட்டு**

1. நற்செய்தியின் நாயகனே இறைவா, பேதுருவின் அழைப்பிலே நம்பிக்கையில் திருச்சபையை ஆண்டு நடத்திக் கொண்டிருக்கும் எம் திருத்தந்தை பிரான்சிஸ், ஆயர்கள், குருக்கள், கன்னியர், துறவியர் மற்றும் பொதுநிலையினர் அனைவரும் இவ்வுலக அதிகாரங்களைக் கொண்ட மனிதர்களுக்குக் கீழ்ப்படிவதை விட்டு அனைத்தையும் படைத்து ஆண்டு நடத்தும் ஆண்டவருக்கே கீழ்ப்படிவோம் எனும் உறுதிமிக்க விசுவாச வாழ்வை வாழ தேவையான வரங்களைப் பொழிய வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

2. அனைத்துலகின்மீதும் அதிகாரம் கொண்ட இறைவா, இவ்வுலக வாழ்வில் தற்கால அதிகாரங்கள் கொண்ட தலைவர்கள், அதிகாரிகள், சமூக ஆர்வலர்கள் அனைவரும், இவ்வுலகின் அனைத்தின்மீதும் அதிகாரம் கொண்டு இரக்கமற்றவர்களாக அநீதியுடன் அதிகாரம் செலுத்தி, நிரபராதிகளைத் தண்டிக்கின்றார். ஏழைகள், அனாதைகள், அப்பாவி மாணவிகள்மீது வன்கொடுமைகளைச் சுமத்திவிட்டு உயிர்ப்பலிகளை வாங்குகின்றனர். இவர்கள் கடவுளின் அன்புக்குக் கட்டுப்பட்டு, இரக்கத்தின் மேன்மையை நீதியின் மூலம் செய்து மக்களின் வாழ்வாதாரங்களை எங்கும் ஏற்படத் தேவையான வரமருள வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

3. இரக்கமிகு இறைவா, தொடக்க கால கிறிஸ்துவ சமூகத்தைப்போல இன்றைய அன்பிய சமூகங்களின் வாழ்வும், பணியும் எங்கள் பங்குத் தளங்களில் நற்செய்தியின் மதிப்பீடுகளுக்குச் சான்றாக அமைந்து செயல்படத் தேவையான வரமருள வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

4. வாழ்வளிக்கும் வள்ளலே இறைவா, குடும்பங்கள் தூய ஆவியின் ஆற்றலால் நற்செய்தியின்படி கீழ்ப்படிந்து அன்புடனும், நட்புடனும், பகிர்ந்து வாழ்வதிலும் நிலைத்திருக்கச் செய்யத் தேவையான வரங்களை அருளுமாறு இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

**17.04.2016 பாஸ்கா காலம் நான்காம் ஞாயிறு** **திருப்பலி**

திருமதி ராணி வில்சன்

**முன்னுரை**

கிறிஸ்துவில் பிரியமானவர்களே, ஒளி தன்னை கரைத்து பிறருக்கு பயனளிக்கிறது. ஒளிக்கென்று சில தன்மைகள் உண்டு. ஒளி இருளைப் போக்கவல்லது. அது வழிகாட்டுகிறது, மற்றும் வாழ்வளிக்கிறது. சூரிய ஒளி உயிரினங்களின் வாழ்வுக்கும் வளர்ச்சிக்கும் தேவையானது என்பது அறிவியல் பூர்வமாக நாம் தெரிந்து கொண்ட உண்மை. அதுபோல "ஒளியாக இருங்கள்" என இறைவனின் கட்டளையை ஏற்று திருத்தூதர்களும், குறிப்பாக புனித பவுலடிகளாரும் பர்னபாவும் மக்களின் பாவ இருளை நீக்க கூடியவர்களாகவும், அவர்களுக்கு வழிகாட்டி வாழ்வளிக்கக் கூடியவர்களாகவும் வாழ்ந்தனர்.

நம்மையும் திருஅவை திருமுழுக்கின் வழியாக புதிய நற்செய்தி அறிவிப்புப் பணியை அறிவிக்க அழைத்துள்ளது. அறிந்தவர்களுக்கும் அறியாதவர்களுக்கும் நம் இறைவனின் மீட்பு எனும் விடுதலையின் மகிழ்வை அறிவித்து, அப்படி அறிவிக்கும்பொழுது ஏற்படும் இன்னல்களை ஏற்று பயணித்து, வழிகாட்டியாகவும், வாழ்வளிப்பவர்களாகவும் வாழ வரம் வேண்டுவோம். அனைத்து மக்கள் வாழ்விலும் ஒளியை ஏற்றும்போது அவர்களும் மீட்பின் மகிழ்வை உணர்ந்து அன்றுபோல இன்றும் என்றும் இறைவனைப் போற்றவும், புகழவும், ஆராதிக்கவும் இத்திருப்பலியில் மன்றாடுவோம்.

**விசுவாசிகளின் மன்றாட்டு**

1. தாயும் தந்தையுமான இறைவா, "உலகம் முழுவதும் என் மீட்பை அடைவதற்கு நான் உன்னை வேற்றினத்தார்க்கு ஒளியாக ஏற்படுத்துவேன்" என அழைத்த எம் திருஅவையின் அனைத்து அருள்பணியாளர்களையும் சிறப்பாக நமது திருத்தந்தையை உமது ஆசீர்வாதங்களினால் நிரப்பி வழிநடத்த வேண்டி இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

2. பாதுகாக்கும் இறைவா, புதிய நற்செய்தி அறிவிப்புப் பணியில் ஈடுபட்டிருக்கும் அனைத்து தமிழக பொதுநிலையினரையும் பாதுகாத்து, வாழ்வளிக்கும் நீருற்றிற்கு அழைத்துச் சென்று அவர்கள் பருகி மகிழ வரம் வேண்டி இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

3. நடைபெற உள்ள தேர்தலில் எமக்கு நல்லாட்சி அமைந்திடவும் உண்மையான ஏழைகள் வாழ்வில் வளம் பெறவும் வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

4. இறைத்தந்தையின் திருவுளத்தை நிறைவேற்றுவதையே உம் பணியாய் கொண்ட இயேசுவே, எம் வாழ்வில் இறைத்தந்தை எமக்கென வகுத்துள்ள திருவுளம் அறிந்து எம் அழைப்பை உணர்ந்து அதை அன்றாட வாழ்வில் வாழும் மனத்திடம் அளித்தருள வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

**24.04.2016 பாஸ்கா காலம் ஐந்தாம் ஞாயிறு** **திருப்பலி**

திருமதி. டிலைலா சேவியர்

**முன்னுரை**

கிறிஸ்தவ வாழ்வின் சாரம் அன்பு. நிறைவாழ்வை மண்ணிலேயே தோற்றுவிப்பது அன்பு. அன்பு ஒன்றே இறைமக்களின் அடையாளம் மன்னிப்பு, தோழமை, கரிசனை, தியாகம், பிறர்நலம் ஆகியவற்றில் வெளிப்படும் அன்பே இறைவனின் உண்மையான திருவுருவம். அந்த உருவும் சாயலும் நம்மிடம் உள்ளதா என்ற சிந்தனையோடு இப்பணியில் இணைவோம்.

**விசுவாசிகளின் மன்றாட்டு**

1. அன்பே உருவான இறைவா, "நீங்கள் ஒருவர் மற்றவரிடம் அன்பு கொண்டிருக்க வேண்டும்" என்ற உமது கட்டளைப்படி திருச்சபையை வழிநடத்தும் திருத்தந்தை, ஆயர்கள், குருக்கள், கன்னியர்கள், துறவறத்தார் அனைவரும் தங்களின் பணிகளை அன்பின் அடிப்படையில் பணிபுரியவும் அதனால் இயேசுவின் சாட்சிகளாக வாழவும் தேவையான ஆன்ம சரீர நலம்தர வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகிறோம்.
2. "உன்னைப்போல் பிறரை நேசி" என்று கூறிய இயேசுவே, அன்பு தனிந்துப் போய்க் கொண்டிருக்கின்ற இந்நாட்களில் எங்களிடம் காண்கின்ற சண்டை, போட்டி, பொறாமை, பேராசை போன்ற தன்னலச் செயல்களை மாற்றி சமாதானம், விட்டுக்கொடுத்தல், எளிமை, பிறர்நலம் போன்ற நற்கிரிகைகளால் எங்களை நிரப்பி இதன் வழியாக சமுதாயத்திற்கு பயனுள்ளவர்களாக எங்களை மாற்ற வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகிறோம்.
3. இரக்கம் காட்டுங்கள், கடவுளின் இரக்கத்தை பெறுவீர்கள் என்று கூறிய இயேசுவே, மருத்துவமனை, முதியோர் இல்லம், சிறைச்சாலை, குழந்தைகள் காப்பகம், மற்றும் ஆசிரியர்கள் அனைவரும் தங்களுடைய பணியில் ஏற்படும் சோர்வு, கோபம், வெறுமை இவைகளை இறைவனின் வல்லமையால் மாற்றி தங்களுக்கு கிடைத்துள்ள இந்த அரிய வாய்ப்பான பிறரன்பு பணியை அன்போடும், பரிவோடும், தியாக சிந்தனையோடும் செய்ய வேண்டிய அருளைத்தருமாறு இறைவா உம்மை மன்றாடுகிறோம்.
4. பாவிகளை தேடிச்சென்று நேசிக்கும் இயேசுவே, இன்றைய நாட்களில் பொன், பொருட்கள்மீதும் நவீன சாதனங்கள்மீதும் அதிகம் நாட்டம் கொண்டுள்ள நமக்கு, "அடுத்தவர்மீது அக்கறைக்கொண்டு வாழ்வதே உண்மையான நற்செய்தி பணியாகும் என்று நமது திருத்தந்தை பிரான்சிஸ் கூறுவதுபோல கைவிடப்பட்டோர் அனாதைகள், நம்பிக்கை இழந்தோர், இளையோர், ஓரம் தள்ளப்பட்ட பெற்றோர்கள் இவர்களுக்கு வேண்டிய அன்பும், பாசமும், பரிவும் காட்டும் நல்ல அன்பான உள்ளத்தைத் தர வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

**25.04.2016 புனித மாற்கு நற்செய்தியாளர் விழா** **திருப்பலி**

திரு. ஜான் அலெக்சாண்டர்

**முன்னுரை**

அன்புக்குரியவர்களே, இன்று திருஅவை புனித மாற்கு நற்செய்தியாளரின் திருவிழாவை கொண்டாட நம்மை அழைக்கின்றது. இவர் சில நேரங்களில் யோவான் மாற்கு என்றும் அழைக்கப்பட்டார். இவரின் இல்லம் ஆதிக்கிறிஸ்தவர்கள் கூடுமிடமாக இருந்தது. புனித மாற்கு, புனித பவுலோடும் தன் உறவினரான பர்னபாவோடும் நற்செய்திப் பயணங்களில் பங்கேற்றார். எகிப்தின் அலெக்சாந்திரியா நகர் திருச்சபையை இவர் நிறுவியதாக மரபு கூறுகிறது. இன்றைய நற்செய்தி வாசகத்தில், "இயேசு சீடர்களை நோக்கி, உலகெங்கும் சென்று படைப்பிற்கெல்லாம் நற்செய்தியைப் பறைச்சாற்றுங்கள் என்றார் (மாற்கு 16:15). இயேசு கொணர்ந்த நற்செய்தி என்ன? கடவுள் நம்மை அன்பு செய்கிறார், நாம் கடவுளின் பிள்ளைகளாக இருப்பதால் கடவுள் காட்டும் வழியில் நடந்து சென்று அவரிடத்தில் நிலையான அமைதியையும் மகிழ்ச்சியையும் கண்டுக்கொள்ள வேண்டும். இச்செய்தியை இயேசு ஒரு சில மனிதர்களுக்கு மட்டுமே அறிவிக்கப்பட வேண்டிய இரகசியமாகக் கருதவில்லை. மாறாக, உலகில் வாழ்கின்ற அனைத்து மக்களுக்கும் இந்நற்செய்தி அறிவிக்கப்பட வேண்டும் என்பதே இயேசுவின் பார்வை.

"நற்செய்தி அறிவித்தல்" வெறும் வார்த்தைகளால் நடைபெறுகின்ற நிகழ்வு அல்ல. மாறாக, நற்செய்தி என்பது ஒரு வாழ்க்கை முறை. இயேசுவின் போதனையை உள்ளத்தில் ஏற்று, அதை வாழ்வில் கடைப்பிடிப்பதே நற்செய்தி அறிவிப்பின் முக்கிய அம்சம். இதையே நாம் "சான்று பகர்தல்" அல்லது சாட்சிய வாழ்வு என்கிறோம். ஆகவே நற்செய்தியின் ஆற்றல் இவ்வுலகை உருமாற்றும் திறன் கொண்டது என நாம் உணர்ந்து இப்பலியில் பங்கெடுப்போம்.

**விசுவாசிகளின் மன்றாட்டு**

1. இறைமக்களாம் திருச்சபையிலுள்ள ஒவ்வொருவரும் இயேசுவின் போதனையை உள்ளத்தில் ஏற்று, அதை வாழ்வில் கடைப்பிடிப்பதே நற்செய்தி அறிவிப்பின் முக்கிய அம்சம் என்பதை நாங்கள் உணரும் ஆற்றலை தர வேண்டி உம்மை மன்றாடுகிறோம்.

2. அன்பு இறைவா, இயேசுவின் போதனை மனிதரை ஓர் உயர்ந்த நிலைக்கு இட்டுச் செல்லும் வழியாக உள்ளது. இவ்வுலகத்தோடு எல்லாமே முடிந்துபோகும் என்றில்லாமல் கடவுளின் ஆட்சி நிறைவுறும் காலம் இவ்வுலகைக் கடந்தது என்பதை நாங்கள் நம்பும் மனதைத் தர வேண்டி உம்மை மன்றாடுகிறோம்.

3. அன்பு இறைவா, இவ்வுலகை அன்பு நிலவும் ஓர் இடமாக, நீதி தவழ்கின்ற தளமாக மாற்றியமைத்திட நாம் உழைக்க வேண்டும் என்பதும் நற்செய்தி அறிவிப்பின் முக்கிய அம்சம் ஆகும் என்பதை அறியும் ஆற்றல் வேண்டி உம்மை மன்றாடுகிறோம்.

4. அன்பு இறைவா, இயேசுவைப் பின்செல்வோர் அவருடைய ஆவியால் உந்தப்பட்டு நற்செய்தியின் தூதுவர்களாக மாறினால் இவ்வுலகில் கடவுளின் ஆட்சி இன்னும் தெளிவாகத் துலங்கும் என்பதை நாங்கள் உருமாற்றம் அடைய அருள்தர உம்மை மன்றாடுகிறோம்.

28.04.2016 **புனித லூயி தெ மான்ட்ஃபோர்ட்** **திருப்பலி**

திரு. ஜான் சுரேஷ்

**முன்னுரை**

பிரான்ஸ் நாட்டில் மான்ட்ஃபோர்ட் என்னுமிடத்தில் 1673, ஜனவரி 31 அன்று பிறந்தவர் லூயிஸ். குழந்தை பருவம் முதலே நற்கருணை ஆண்டவர்மீது அளவற்ற அன்பும், பக்தியும் கொண்டிருந்த லூயிஸ் அடிக்கடி ஆலயத்திற்கு சென்று செபிக்கும் பழக்கம் உடையவர். லூயிஸ் 12 வயதில் ரென்ஸ் என்னுமிடத்தில் உள்ள இயேசு சபை கல்லூரியில் படிக்க சென்றார். இவர் இளவயதிலிருந்தே ஏழைகளுக்கு உதவும் பண்பு கொண்டிருந்தார். லூயிஸ் அவர்கள் தமது அழைத்தலின் உண்மையான நோக்கத்தை தனது 32ம் வயதில் லூயிஸ் புரிந்து கொண்டார். இவர் சிறந்த பேச்சாளரான லூயிஸின் எளிய வாக்கியங்கள் மக்களை கவர்ந்தன. நம்ப முடியாத அளவுக்கு ஏழ்மையான எளிய வாழ்வு வாழ்ந்தார்.

இவருடைய வாழ்வில் 2 முக்கியமான நிகழ்வுகள் நிகழ்ந்தன. **ஒன்று:** ஒருமுறை லா ரொச்சல்லே என்னுமிடத்தில் போர் வீரர்களுக்கு இறை செய்தியை போதித்தார். அவர் உரையை கேட்ட அனைத்து வீரர்களும் தங்களது குற்றங்களை நினைத்து கதறி அழுதார்கள். **இரண்டு:** பொன்சாத்து என்னுமிடத்தில் கல்வாரி மலையை எழுப்ப 400 பேர் குறைந்தது 15 மாதங்கள் முயன்று கல்வாரி மலையை எழுப்பினார்கள். வேலை முடிய இருந்த தருவாயில் அதனை இடிக்க வேண்டும் என அரசர் கட்டளைப் பிறப்பித்தார். மக்கள் பல்வேறு வழிகளில் முயன்றும் அரசரின் உத்தரவே வெற்றி பெற்றது. அவ்வாறு இருந்தபோதும் "கடவுள் போற்றப்படுவராக" என்று பதிலுரைத்தார். அனைத்தையும் இறைத்திட்டமென ஏற்றும் பிறருக்காகவே வாழ்ந்த லூயிஸ் 1716ல் ஏப்ரல் 23ல் இறந்தார். இவரை திருத்தந்தை 13ம் சிங்கராயர் அருளாளர் நிலைக்கும், 1947 ஜீலை 13 அன்று திருத்தந்தை 12ம் பத்திநாதர் புனிதர் பட்டத்திற்கும் உயர்த்தினார்.

**விசுவாசிகளின் மன்றாட்டு**

1. திருச்சபையின் தலைவரே எம் இறைவா, திருச்சபையை வழிநடத்தும் எம் திருத்தந்தை, ஆயர்கள், குருக்கள், கன்னியர் ஆகியோர் அனைவரையும் ஆசீர்வதித்து ஏழ்மையான மக்களை வளர்ச்சியின் பாதையில் வழிநடத்திட வேண்டுமென்று ஏழ்மையாய் வாழ்ந்த புனித லூயி தெ மான்ட்ஃபோர்ட் வழியாக உம்மை மன்றாடுகிறோம்.

2. ஏழைகளின் பங்காளரே எம் இறைவா, எம் நாட்டில் உள்ள ஏழை எளிய மக்களை உம் பாதம் சமர்ப்பிக்கின்றோம். இவர்களின் பொருளாதாரம், கல்வி மற்றும் அனைத்து உரிமைகளையும் நாட்டில் பெற்று சிறப்புடன் வாழ வேண்டுமென்று ஏழைகளின் பங்காளரே புனித லூயி தெ மான்ட்ஃபோர்ட் வழியாக உம்மை மன்றாடுகிறோம்.

3. உலகெங்கும் சென்று நற்செய்தியை அறிவியுங்கள் என்று மொழிந்த இறைவா, தம் வாழ்வையே நற்செய்தியாக வாழ்ந்து காட்டி எது நடந்தாலும் அனைத்தையும் உமக்கு கொடுத்து வாழ்ந்த எம் புனித லூயி தெ மான்ட்ஃபோர்ட் போல் வாழ்ந்து உமக்கும் திருச்சபைக்கும் சாட்சியுள்ள பிள்ளைகளாக வாழ வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

**29.04.2016 புனித சியென்னா கத்ரினம்மாள் - இத்தாலி நாட்டின் பாதுகாவலி** **திருப்பலி**

திருமதி ராணி வில்சன்

**முன்னுரை**

கிறிஸ்துவில் பிரியமானவர்களே, இப்புனிதையின் வரலாறு நீண்டது சுருக்கமாக இங்கே மனதில் கொள்ளுவோம். தாய்வழிச் சமுதாயம் தான் முதலில் என வரலாறு கூறுகிறது. திருவிவிலியம் பழைய ஏற்பாட்டில் தலைமை ஏற்பவர்களாக, போராடுபவர்களாக, நீதி வழங்குபவர்களாக பெண்கள் (தெபோரா, யூதித், எஸ்தர்) இருந்தனர் என கூறுகிறது. புதிய ஏற்பாட்டில் (லூக் 8: 1-3) இறையேசுவோடும் திருத்தூதர்களோடும் பெண்களும் பணிபுரிந்தனர் என பறைசாற்றுகிறது. மணமாகாதவர்மட்டுமல்ல, மணமானவர்களும் குறிப்பாக பெண்களும் அநேகர் புனிதைகளாக அறிவிக்கப்பட்டுள்ளனர். திருஅவை வரலாற்றில் இந்த வரிசையில்தான் இப்புனிதர் பல இன்னல்களுக்கு மத்தியில் தன்னை அடையாளப்படுத்தாமல் இறை இயேசுவை அடையாளப்படுத்தி வாழ்ந்தார்.

பெற்றோருக்கு 25 பிள்ளைகளில் கடைக்குட்டி வாழ்ந்த காலம் கி.பி. 1347-1380. இளம் வயதிலேயே மாடியேறும்போது ஒவ்வொரு படிக்கட்டுக்கும் ஒரு அருள்நிறைந்த மரியே என்ற செபம் சொல்லுவாள். தாய் அழகு படுத்திச்சொல்லியும் தன் கூந்தலை வெட்டி, அழகு வேண்டாம், திருமணம் வேண்டாம் என இறை ஞானத்தில் வளர்ந்தவர். அன்னை மரி இறை இயேசு மற்றும் வான் வீட்டாரையும் இரண்டு முறை காட்சி கண்டு வார்த்தையை கேட்டு காயங்களை ஏற்றவர். ஆன்ம ஈடேற்றத்திற்கு உழைத்து பல பெண்களின் மதிப்பையும் தோழமையும் பெற்றவர். திருத்தந்தை 11ம் கிரகோரியார் காலத்தில் மீண்டும் சிலுவைப்போர் பிளாரன்ஸ் நகர் தள்ளிவைப்பு போராட்டம், 9ம் கிரகோரியார் மறைவுக்குப் பிறகு திருத்தந்தை 6ம் அர்பனுக்கு எதிரான போராட்டம் என பல திருஅவை போராட்டங்களில் திருச்சபைக்கு உறுதுணையாய் பணிபுரிந்தவர். இதனால் திருத்தந்தைக்கே இவரது அறிவுரை தேவைப்பட்டதால் உரோமை வர இவரை அழைத்தார். இவரும் அங்கு சென்று தங்கினார். தொடர் பணியினால் இவரது பல தியாகத்தால் நாளுக்கு நாள் உடல் நலிவடைந்து, தனது இளம் வயதிலேயே அதாவது 33 வயதிலேயே தன் இன்னுயிரை விட்டு விண்ணகம் சேர்ந்தார். இவரைப்போல நாமும், திரு அவைக்கும் சமூகத்திற்கும் உழைக்க இறைவனை அடையாளப்படுத்த சபதம் ஏற்போம். செபிப்போம்.

**விசுவாசிகளின் மன்றாட்டு**

1. தாயும் தந்தையுமான இறைவா, தியாகம் நிறைந்த வரலாறு எங்கள் திருஅவையில் உண்டு. அதேபோல எங்கள் திருஅவையின் அனைத்து அருள் பணியாளர்களுடன் வாழவும் உமது இறையருளை பெறவும் வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

2. பெண்களுக்கு சிறப்பிடம் கொடுத்த இறைவா, இன்னும் பல பெண்கள் திருஅவைக்காக பல பணிகளில் ஈடுபட்டுள்ளனர். அவர்களது இறைப்பணியில் நீர் துணைநின்று பாதுகாத்து, ஆசீர் அளித்திட உம்மை மன்றாடுகிறோம்.

3. ஆதரவளிக்கும் இறைவா, மனிதர்களின் பலவிதமான சுரண்டல்களினால் (கல், மண், மரம், கடல்மாசு, நீர்வளம்) பருவநிலை மாற்றங்கள் ஏற்பட்டு, பேரிடர்கள் நிகழ்கின்றன. அதிகமான வெப்பத்தால் நாங்கள் அவதிப்படுகிறோம். இறைவா உமது மன்னிப்பு எனும் வரத்தினால் இப்பாவங்களை மன்னித்து எங்களுக்கு உதவிட வேண்டி உம்மை மன்றாடுகிறோம்.

4. வழிநடத்தும் இறைவா, எமது நாட்டில் நடக்க இருக்கும் தேர்தலில் மக்களுக்காக உழைக்கும் சிறந்த தலைவர்களையும், நல்ல ஆட்சியையும் உருவாக்கித் தந்து, கெட்ட எண்ணம் கொண்ட அரசியல் தலைவர்களிடமிருந்து எங்களையும் நாட்டையும் காத்திடவேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

**30.04.2016 புனித ஐந்தாம் பத்திநாதர்** **திருப்பலி**

திருமதி ராணி சம்பந்தன்

**முன்னுரை**

இறையேசுவில் பிரியமான இறைமக்களே, இன்றைய தினம் நாம் திருப்பலியில் புனித ஐந்தாம் பத்திநாதரை நினைவு கூறுவோம். அவரைப்பற்றி அறிந்து கொள்வோம். இவர் வாழ்ந்த காலம் கி.பி. 1504-1572வரை என்பது வரலாற்றுக் குறிப்பு. புனித ஐந்தாம் பத்திநாதர் தனது 19ம் வயதில் புனித சுவாமிநாதரின் சபையில் சேர்ந்தார். மற்ற துறவிகளுக்கிடையே மிகவும் எடுத்துக்காட்டாக தவவாழ்வு வாழ்ந்தார். பின்னர் குருப்பட்டம் பெற்று, குருத்துவ கல்லூரியில் 16 ஆண்டுகள் குருத்துவ மாணவர்களுக்கு பேராசிரியராக கல்வி கற்பித்தார். பின்னர் இவரது சேவையினால் ஆயராகி, பின் கர்தினால் பட்டமும் பெற்றார். அச்சமயம் திருத்தந்தையாக இருந்தவர் மரித்ததினால் இவர் திருத்தந்தையாக நியமிக்கப்பட்டார். திருத்தந்தையாக பொறுப்பேற்ற பின்பும் தவவாழ்க்கையை மேற்கொண்டார். இவர் காலத்தில் துருக்கியர்கள் பெரும்படையோடு கிரேக்க நாட்டில் லெப்பாண்டோ என்ற இடத்தில் கிறிஸ்துவர்களோடு யுத்தம் புரிந்தனர். ஐரோப்பாவை கைப்பற்றி கிறிஸ்துவ மதத்தை அழிப்பதே அவர்கள் நோக்கமாக இருந்தது. இதையறிந்த திருத்தந்தை மக்களை இடைவிடாமல் செபமாலை செபித்து மாதாவை மன்றாட சொன்னார்.

அனைவரும் ஆர்வத்துடன் மாதாவை மன்றாட செபிக்க வெற்றி கிறிஸ்தவர்களுக்கு கிடைத்தது. இதனை புதுமையாக கண்ட திருத்தந்தை புனித ஐந்தாம் பத்திநாதர் உரோமை மக்களை கடவுளுக்கும் மாதாவிற்கும் நன்றி செலுத்த செய்தார். கிறிஸ்தவர்களின் சகாய அன்னை என்ற பெயரையும் அன்னைக்கு சூட்டினார். அதோடு செபமாலை மாதா பக்தியையும் திருநாளையும் ஏற்படுத்தினார். அநேக வேலைகளுக்கிடையில் இருமுறை நற்கருணை பேழையின் முன் முழந்தாளிட்டு செபித்தார். ஏழைகளுக்கு ஏராளமான தர்மம் செய்தார். நோயாளிகளை வீடுகளிலும் இல்லங்களிலும் சந்தித்து ஆறுதல் கூறுவார். இவ்வாறு நமது புனித ஐந்தாம் பத்திநாதரின் வழியில் தேவமாதாவின் திருசெபமாலை நம்மையும் உலகையும் பாதுகாத்து கொண்டிருக்கிறது என்பதை தெரிந்து தெளிந்த நம்பிக்கையுடன் இத்திருப்பலியில் பங்கேற்போம்.

**விசுவாசிகளின் மன்றாட்டு**

1. தாயும் தந்தையுமான இறைவா, விண்ணையும் மண்ணையும் அதை சார்ந்தவைகளையும் படைத்த நம் தந்தையாகிய ஆண்டவரின் இறையாட்சி உலகமெங்கும் மலர்ந்திட நற்செய்தியை வாழ்வாக்க உழைக்கும் திருத்தந்தை, ஆயர்கள், குருக்கள், இருபால் துறவியர் மற்றும் பொதுநிலையினர் அனைவரும் உம் கரத்தின் வல்லமையால் யாதொரு கலக்கமுமின்றி சேவை மனப்பான்மையுடன் தன்னமில்லாமல் மக்களனைவருக்கும் வழிகாட்டிகளாக வாழ்ந்திட உம்மை மன்றாடுகிறோம்.

2. அன்பு தெய்வமே இறைவா, எளியோரின் புலம்பலையும், வறியோரின் பெருமூச்சையும் கேட்டு இப்பொழுதே எழுந்து வருகிறேன் என்று கூறியவரே, அவர் ஏங்குகிறபடி என் பாதுகாப்பில் வைப்பேன் என்று கூறியவரே, உம் உயிர்த்தெழுதலில் எளியோரின், வறியோரின் அபய குரல் கேட்டு அருள்புரிய உம்மை மன்றாடுகிறோம்.

3. உண்மையின் இறைவா, கறைபடாத கைகளும், மாசற்ற மனமும் உடையவரும் பொய் தெய்வங்களை நோக்கி தம் உள்ளத்தை உயர்த்தாதவரும் வஞ்சக நெஞ்சோடு ஆணையிட்டு கூறாதவரும் ஆசிபெறுவர் என கூறியவரே, இக்காலச் சூழ்நிலையில் சந்தர்ப்ப வசத்தால் பொய் தெய்வங்களில் தஞ்சம் புகும் மாந்தரை நீர்தாமே தடுத்தாட்கொள்ள வேண்டும் என்று உம்மை மன்றாடுகிறோம்.

4. குணமளிக்கும் இறைவா, படுக்கையில் அவர் நோயுற்று கிடக்கையில் ஆண்டவர் அவருக்கு துணை செய்வார், நோய் நீங்கி படுக்கையினின்று அவர் எழும்பும்படி செய்வார் என்ற உமது திருப்பாடல்படி மருத்துவமனைகளிலும், இல்லங்களிலும், நோயின் கொடுமையால் வேதனைப்பட்டு துடித்துக்கொண்டிருக்கும் நோயாளிகளின் மேல் கருணைக் கூர்ந்து அவர்களின் வேதனைகளை நீக்கி சுகமளிக்க உம்மை மன்றாடுகிறோம்.

## இரக்கத்தோடு வாழ எட்டு வழிகள்

**1. அக்கறை கொள்ளுங்கள்**

ஒரு மனிதன் அடிப்படைத் தேவைகளையும் தாண்டி அவன் உள்ளுக்குள்ளே அனுபவிக்கும் துன்பம், நோய், தன்மை, ஒதுக்கப்படுதல், வாட்டம், சோர்வு, பயம் போன்ற உணர்வுகளையும் நாம் உள் வாங்கவேண்டும். பிறரின் நோய் தன்நோய் போல, அடுத்தவர் துன்பம் நம் துன்பம்போல எண்ண வேண்டும். இந்நிலையில் இருப்போரை இயேசுவின் கண்களோடு உற்று நோக்க வேண்டும். எந்தெந்த வழிகளில் இவர்களுக்கு உதவி செய்தால் அவர்கள் முழு மனிதராவர் என தீர்மானிக்க வேண்டும்.

**2. தீர்ப்பிடாதீர்கள்**

உனக்கு இதுவும் வேண்டும் இன்னமும் வேண்டும் என்றோ நீயே உன் தலைமேல் மண்ணை வாரி இறைத்துக்கொண்டாய் என்றோ இரக்கமுள்ள மனிதர்கள் ஒருபோதும் சொல்லமாட்டார்கள். தவறே அவர்கள் பக்கம் இருந்தாலும் நடந்ததை வைத்து அவர்களை தீர்ப்பிட நாம் யார்? தீர்ப்பிட உரிமையுள்ளவரே இரக்கம் காட்டும்போது நாம் பிறர்மேல் இரக்கம் காட்ட வேண்டாமா?

**3. புறணி பேசாதீர்கள்**

எரிகிற தீயில் எண்ணெய் வார்ப்பதுபோல புறணி பேசுவது என்பது ஏற்கனவே மனம் நொந்து காயப்பட்ட நபர்களை மேலும் காயப்படுத்துவது. இரக்கமுள்ள மனிதர்கள் ஒருபோதும் அடுத்தவரைப் பற்றி வீண் பேச்சிலும், வரம்பற்ற உரையாடல்களிலும் ஈடுபடமாட்டார்கள். திருத்தந்தை பிரான்சிஸ், "புறணி பேசுவது பயங்கரமானது. ஆரம்பத்தில் அதுவேடிக்கையாக இருந்தாலும், இறுதியில் அது இதயத்தை கசப்புள்ளதாக்கி உயிரைக் கொல்லும் நஞ்சாக மாறிவிடுகிறது", என்று கூறுகிறார்.

**4. பழிக்குப் பழி வாங்காதீர்கள்**
இரக்கமுடையோர் காழ்ப்புணர்ச்சி கொள்ளமாட்டார்கள், மன வெறுப்பு காட்டமாட்டார்கள். தங்களுக்கு என்ன நேர்ந்தாலும் பழிவாங்க எண்ணாமல் மன்னித்து விடுவார்கள். மன்னிப்பதால் உன் இதயத்திலிருந்து கோபம், கேடு, கடுமை, கசப்பு போன்றவற்றை எடுத்தெறிய முடிகிறது. உன் ஆன்மாவுக்கு அமைதி கிடைக்கிறது. மன்னிக்காதவர்கள் தங்கள் கடுஞ்சினத்திலும் சீற்றத்திலும் சிறைப்பட்டிருப்பர். மன்னிப்பவர்கள் இறைவனின் இரக்கத்தை பிரதிபலிப்பர்.

**5. இரக்கம் காட்ட மறுக்காதீர்கள்**
இரக்கம் காட்டக்கூடிய வாய்ப்புகள் வரும்போது நாம் விலகிச்செல்ல விரும்புவதுண்டு. உன்னைவிட வேறு யாராவது அரசோ அல்லது திருச்சபையோ உதவிட முடியும் என எண்ணுவது எளிது. ஆனால் உண்மை என்னவென்றால் தேவையில் இருப்போருக்கு இரக்கம் காட்ட மறுக்கும் போது நாம் இயேசுவையே விட்டு விலகிச் செல்வதற்கு இணையாகும். அடுத்தவர்மீது அதிகமதிகமாய் இரக்கம் காட்டுவோம்.

**6. சிறுசிறு இரக்கச் செயல்களில் கவனம் செலுத்துங்கள்**
ஒவ்வொரு நாளும் சிறிய அளவில் இரக்கம் காட்ட பல வாய்ப்புகள் வந்து கொண்டே இருக்கின்றன. உறுமீன்வரும் வரை வாடி நிற்கும் கொக்குபோல இல்லாமல் வழியில் வரும்சிறு இரக்கச் செயல்களை கவனத்தில் கொள்வோம். அடுத்தவரைக் காணும்போது நாம் காட்டும் புன்முறுவலோ அல்லது உற்சாகம் தரும் வார்த்தையோ அவர்களுக்கு பேருதவியாய் இருக்கும்.

**7. பிறரிடமிருந்து இரக்கத்தை ஏற்றுக்கொள்ளுங்கள்**
நமக்கு இரக்கம் தேவையென உணர்ந்த ஏற்றுக்கொள்ள தாழ்ச்சி வேண்டும். பிறர் உனக்கு இரக்கம் காட்ட அனுமதி வழங்கும்போது அவர்கள் உன் துன்பத்தை உணர வாய்ப்பைத் தருகின்றாய். இது நடைபெறும்போது அவர்கள் உன்னைக் குணப்படுத்தவும், உனக்கு ஆறுதல் தரவும் இறையன்பின் கருவிகளாக மாறுகின்றனர்.

**8. இரக்கத்திற்காக மன்றாடுங்கள்**
இன்னும் மேலும் இரக்கமுள்ளவராக இருக்க மன்றாடுங்கள். இரக்கம் யாருக்கெல்லாம் அவசியமாக, அவசரமாக தேவைப்படுகிறதோ அவர்களுக்காக மன்றாடுங்கள். உலகில் பல்வேறு துன்பங்களுக்கு உள்ளாகி வருந்துவோருக்காக மன்றாடுங்கள். ஒருவர் அடுத்தவர்மீது இரக்கம் காட்டக்கூடிய அளவுக்கு உலகிலுள்ள அனைவரும் இறை இரக்கத்தைப் பெற்றுக்கொள்ள மன்றாடுங்கள்.

"இரக்கமுடையோர் பேறுபெற்றோர், ஏனெனில் அவர்கள் இரக்கம் பெறுவர்".

## இறை இரக்கத்தின் செபமாலை

இயேசுவே நீர் மரித்தீர், ஆனால் இந்த மரிப்பு ஆன்மாக்களின் வாழ்க்கை ஊற்றாகவும் இரக்கத்தின் கடலுமாகவும் வழிந்தோடியது. ஓ வாழ்வின் ஊற்றே கண்டுபிடிக்க முடியாத இறைவனின் இரக்கமே உலகம் முழுவதையும் உம்முள் அடக்கி உமது இரக்கம் முழுமையும் எம்மீது பொழிந்தருளும்.

இயேசுவின் இருதயத்திலிருந்து இரக்கத்தின் ஊற்றாக வழிந்தோடி இரத்தமே தண்ணீரே உம்மீது நம்பிக்கை வைக்கிறேன் (மும்முறை)

**பரலோகத்தல் இருக்கிற... அருள்நிறைந்த...**
**விசுவாசப்பிரமாணம்...**

**செபமாலையின் பெரியமணியில்**
நித்திய பிதாவே உமது நேசக்குமாரனாகிய எமது ஆண்டவர் இயேசுக்கிறிஸ்துவின் உடலையும் உதிரத்தையும் ஆன்மாவையும் தெய்வீகத்தையும் எமது பாவங்களுக்காகவும் அகில உலகின் பாவங்களுக்காகவும் பரிகாரமாக உமக்கு ஒப்புக்கொடுக்கிறோம்.

**செபமாலையின் சிறியமணியில்**
இயேசு கிறிஸ்துவின் வேதனை நிறைந்த பாடுகள் வழியாக எங்கள்மீதும், அகில உலகின்மீதும் இரக்கமாயிரும்.

**ஐம்பது மணி முடிந்தபின்**
தூய இறைவா, தூய எல்லாம் வல்லவரே, தூய நித்தியரே, எங்கள்மீதும் அகில உலகின்மீதும் இரக்கமாயிரும் (மூன்றுமுறை)

**இறுதி செபம்**
இரக்கமுள்ள இயேசுவே உம்மை நாங்கள் விசுவசிக்கிறோம், உம்மில் எங்கள் நம்பிக்கையை வைக்கிறோம், எங்கள் பலவீனத்திலும் இயலாமையிலும் எங்களுக்கு உதவியாக வாரும். நீர் எல்லோராலும் அறியப்படவும், நேசிக்கப்படவும் செய்ய எங்களுக்கு வரம் தாரும். அணைகடந்த உமது அன்பில் நம்பிக்கை வைக்கவும் உமது மகிமைக்காகவும் எங்கள் மீட்புக்காகவும் உலகிலும் எம்மிலும் உள்ள தீயச் சக்திகளை முறியடிக்கவும் எமக்கு வரமருளும்.

**மூவொரு இறைவனின் புகழ்**
தந்தைக்கும், மகனுக்கும், தூய ஆவிக்கும் மகிமை உண்டாவதாக, ஆதியிலே இருந்ததுபோல இப்பொழுதும் எப்பொழுதும் என்றென்றும் இருப்பதாக. ஆமென்.

[நன்றி: "இறைவனின் அன்பும் இரக்கமும்" (திரு இருதய திருத்தல வெளியீடு)]

## பகுதி 2: விசுவாசத்தில் வளர...

### ஒளியின் பாதை

பணி. அந்தோணி கிறிஸ்டி சச.,

**முன்னுரை**
உயிர்ப்பின் ஒளியில் நடந்திடும் சகோதர சகோதரிகளே, ஒளியின் பாதை நம் நம்பிக்கையின் பாதை. சிலுவையில் அறையுண்ட கிறிஸ்து உயிர்த்திராவிடில் நாம் கொண்டுள்ள நம்பிக்கை வீண், என்கிறார் பவுலடிகளார், கிறிஸ்தவ வாழ்வின் மையம் கிறிஸ்துவின் உயிர்ப்பே. இறைவனில் நாம் கொண்டுள்ள நம்பிக்கை நமது நிலைவாழ்வை நமக்கு உறுதி செய்யும் நம்பிக்கையாகும். அந்த நிலைவாழ்வு இறந்தோரினின்று உயிர்த்த கிறிஸ்துவாலேயே நமக்கு வழங்கப்படுகிறது. கிறிஸ்து இருளை வென்று ஒளியாய் உயிர்த்து நம் வாழ்விற்கு ஒளியை தந்த நிகழ்வுகளை ஒளியின் மக்களாய் இணைந்து தியானிப்போம்.

**நிலை 1: உயிர்த்த கிறிஸ்து**

**லூக் 24:1-9: இயேசு உயிர்த்தெழுகிறார்**

சாவை வென்று உலகின்மீது பேராற்றல் மிக்கவராய் எழும் உயிர்த்த கிறிஸ்துவின் ஒளியை தியானிப்போம்.

**செபம்:** உயிர்த்த எம் இறைவா, இருள், பாவம், சாவு என்னும் அனைத்தினின்றும் ஒளியாய், மீட்பாய், புதுவாழ்வாய் எம்மை மீட்டருளினீர். எம் வாழ்வின் அன்றாட இன்னல்களினின்றும், சோதனைகளினின்றும், பாவத்தினின்றும் நாங்கள் வெற்றிப்பெற்று உயிர்த்தெழ எமக்கு அருள்தாரும். ஆமென்.

**முதல்:** உலகை வென்றுள்ள உயிர்த்த கிறிஸ்துவே
**எல்:** எங்கள்மேல் இரக்கமாயிரும்
**முதல்:** பரலோகத்தில் இருக்கின்ற...
தந்தைக்கும், மகனுக்கும், தூய ஆவிக்கும் மகிமை உண்டாவதாக
**எல்:** ஆதியிலிருந்ததுபோல இப்போதும் எப்போதும் என்றென்றும் இருப்பதாக ஆமென்.

**நிலை 2: வெறுமையான கல்லறை**

**யோவா 20: 3-9: காலிக்கல்லறைக்கு முன் சீடர்கள்**

உண்மையை மேற்கொண்டு அடக்கியாண்டு தன் ஆற்றலை நிலைநாட்ட துடித்த சாவும் பாவமும் தோல்வியை தழுவி வெறுமையாய் நின்றதை தியானிப்போம்.

**செபம்:** சாவை வென்ற எம் தலைவா, ஆறாத காயங்களும், மாறாத வடுக்களும் எம் வாழ்வின் பொருளை வெறுமையாக்க துடிக்கும்போது உம் வெறுமையான கல்லறை எமக்கு எதிர்நோக்கு அளிப்பதாக. அனைத்தையும் உம் ஆற்றலால் வென்றுவிட்ட நீர் எம்மோடு இருக்கிறீர் என்ற உணர்வோடு எம்மை வாழச்செய்யும். ஆமென்.

**முதல்:** கல்லறையை வென்ற உயிர்த்த கிறிஸ்துவே
**எல்:** எங்கள்மேல் இரக்கமாயிரும்
**முதல்:** பரலோகத்தில் இருக்கின்ற . . . தந்தைக்கும் . . .

**நிலை 3: அன்பு கொண்ட மதலேனாள்**

**யோவா 20:11-18: மதலேனாளுக்கு தோன்றுகிறார் இயேசு**

கிறிஸ்துவை பிரிந்து வாழ இயலாதவராய் கல்லறை முன்பு கலங்கிய கண்களோடு தேடி நிற்கும் மதலேனாள் உயிர்த்த கிறிஸ்துவை கண்டுகொள்ளும் நிகழ்வை தியானிப்போம்.

**செபம்:** அன்பினால் அனைத்தையும் ஆட்கொண்ட கிறிஸ்துவே, அளவற்ற அன்பு கொண்டுள்ள உம்மீது உண்மையான அன்பு கொண்டு வாழ்ந்த மரிய மதலேனாள் முதன்முதலாய் உயிர்த்த உம்மை கண்டுகொள்ளும் அருள் பெற்றார். உம்மீது கொண்ட அன்பினால் நாங்களும் ஒளிப் பெற்றவர்களாய், உம்மை விட்டுப்பிரியாத மனம் கொண்டவர்களாய் உம்மையே பற்றிக்கொண்டு வாழும் வரம்தாரும். ஆமென்.

**முதல்:** அன்பு உறவுகளில் வாழும் உயிர்த்த கிறிஸ்துவே
**எல்:** எங்கள்மேல் இரக்கமாயிரும்
**முதல்:** பரலோகத்தில் இருக்கின்ற . . . தந்தைக்கும் . . .

**நிலை 4: உடன் நடக்கும் கிறிஸ்து**

**லூக் 24: 13-27: எம்மாவுஸ் சீடர்களோடு உடன் நடக்கிறார் இயேசு**

மனமுடைந்து துணிவிழந்த சீடர்களை நிர்கதியாய் விட்டுவிடாது உடனிருந்து, உடன் நடந்து தன்னையே வெளிப்படுத்தும் கிறிஸ்துவை தியானிப்போம்.

**செபம்:** வாக்களித்தபடியே எம்மை விட்டு விலகாத உயிர்த்த கிறிஸ்துவே, மனமுடைந்த சீடர்களை உடனிருந்து வழிநடத்தினீர். உடனிருந்து உற்சாகமூட்டினீர். வார்த்தையை அறியவும் உம் வாக்குகளில் நிலைக்கவும் அவர்களுக்கு வழிகாட்டினீர். எம் வாழ்க்கையில் ஏற்படும் துன்பங்களிலும், மனம் மகிழச்செய்யும் தருணங்களிலும் நீர் உடன் நடக்கின்றீர் என்பதை மறவாமல் வாழும் வரம்தாரும். ஆமென்.

**முதல்:** இருளின் பள்ளத்தாக்கில் நாங்கள் நடந்தாலும் எம்முடன் நடக்கும் உயிர்த்த கிறிஸ்துவே
**எல்:** எங்கள்மேல் இரக்கமாயிரும்
**முதல்:** பரலோகத்தில் இருக்கின்ற . . . தந்தைக்கும் . . .

**நிலை 5: அப்பம் பிடும் கிறிஸ்து**

**லூக் 24: 28-35: அப்பம் பிடுகையில் தன்னையே வெளிப்படுத்துகிறார் இயேசு**

அப்பம் பிடுவதும் ஒருமனப்படுவதும் உயிர்ப்பின் மக்களின் அடையாளங்கள் என்று எண்பிக்கும் உயிர்த்த கிறிஸ்துவை தியானிப்போம்.

**செபம்:** உயிரின் உணவாய் வரும் உயிர்த்த கிறிஸ்துவே, ஆன்ம உணவாய் நம்பிக்கையில் தளர்ந்த அந்த சீடர்களுக்கு நம்பிக்கையில் உரமூட்டினீர். தோல்விகளாலும், தொய்வுகளாலும் மனமுடைந்து இருக்கும் எங்களுக்கு ஆன்ம உணவாய் வாரும். உமது ஆற்றலாலும் அன்பாலும் நாங்களும் நம்பிக்கையிழந்த பலருக்கு வாழ்வில் ஒளியூட்ட வரம் தாரும். ஆமென்.

**முதல்:** ஆன்ம உணவே, உயிர்த்த கிறிஸ்துவே
**எல்:** எங்கள்மேல் இரக்கமாயிரும்
**முதல்:** பரலோகத்தில் இருக்கின்ற . . . தந்தைக்கும் . . .

**நிலை 6: கண்கள் திறக்கும் கிறிஸ்து**

**லூக் 24: 36-43: மூடிய அறையில் சீடர்களுக்கு தோன்றுகிறார் இயேசு**

முடிந்துவிட்ட கதையாய் தங்கள் வாழ்வை கண்ட சீடர்களுக்கும் புத்தொளி தந்து புதுவாழ்வை காணும்படி அவர்களின்

கண்கள் திறக்கும் உயிர்த்த கிறிஸ்துவை தியானிப்போம்.

**செபம்:** புதுவாழ்வை காணும் கண்கள் தரும் உயிர்த்த கிறிஸ்துவே, உம்மோடு நாங்கள் வாழ்ந்த காலமெல்லாம் முடிந்துவிட்டது என்று இருண்ட இதயங்களோடு இருந்த சீடர்களுக்கு ஒளியூட்டி புதுவாழ்வை காணச் செய்தவரே, வீணான முயற்சிகள், விரயமான காலம், விடியாத நாட்கள் என்று நாங்கள் புலம்பித்தவிக்கும் வேளைகளில் எம் கண்களை திறந்து நீர் எமக்கென வைத்திருக்கும் திட்டங்களில் நம்பிக்கை வைத்து புதுவாழ்வை கண்டுக்கொள்ளும் வரம் தாரும். ஆமென்.

**முதல்:** புதுவாழ்வை காணும் கண்கள் தரும் உயிர்த்த கிறிஸ்துவே
**எல்:** எங்கள்மேல் இரக்கமாயிரும்
**முதல்:** பரலோகத்தில் இருக்கின்ற . . . தந்தைக்கும் . . .

**நிலை 7: மன்னிக்க அழைக்கும் கிறிஸ்து**

**யோவா 20: 21-23: பாவங்களை மன்னிக்கும் பணி தருகிறார் இயேசு**

பாவத்தின் சம்பளம் மரணம் என்று பாவத்தின் அடிமையாய் வாழ்ந்த மனிதத்தை மீட்டெடுக்கும் இரக்கத்தின்

அருட்சாதனமாம் ஒப்புரவை உண்டாக்கும் உயிர்த்த கிறிஸ்துவை தியானிப்போம்.

**செபம்:** பாவியான என்னை மீட்க வந்திட்ட உயிர்த்த கிறிஸ்துவே, உம் இறப்பின் பலனாம் மன்னிப்பை எங்களுக்கு அருட்கொடையாய் வழங்கினீர். உம் உயிர்ப்பின் பலன்களை எம் ஆன்ம வாழ்வின் வளர்ச்சிக்கு பயன்படுத்திக் கொள்ளவும், புத்துயிர் அளிக்கும் மன்னிப்பின் ஊற்றாம் ஒப்புரவு அருட்சாதனத்தை ஆர்வமாய் அணுகவும் வரம் தாரும். ஆமென்.

**முதல்:** மன்னிப்பின் முழுமையே உயிர்த்த கிறிஸ்துவே
**எல்:** எங்கள்மேல் இரக்கமாயிரும்
**முதல்:** பரலோகத்தில் இருக்கின்ற . . . தந்தைக்கும் . . .

**நிலை 8: நம்பிக்கையூட்டும் கிறிஸ்து**

**யோவா 20: 24-29: தோமாவின் நம்பிக்கையை ஆழப்படுத்துகிறார் இயேசு**

அறிகுறிகளும் அடையாளங்களும் இல்லாமல் நம்பமாட்டேன் என்று உயிர்ப்பிலே சந்தேகித்த தன் சீடர் தோமாவை

தேற்ற, வலுப்படுத்த, தோன்றும் உயிர்த்த கிறிஸ்துவை தியானிப்போம்.

**செபம்:** என்னிலே நம்பிக்கை கொள்பவன் இறப்பினும் வாழ்வான் என்று எமக்கு நிலைவாழ்வை அளித்து நிற்கும் உயிர்ப்பின் ஆண்டவரே, உம் சீடர்கள் உம்மீது கொண்ட விசுவாசத்தில் வலுவூட்ட அவர்களுக்கு தோன்றி உம்மையே வெளிப்படுத்தினீர். எமது வாழ்வின் சூழல்களில் உம் வார்த்தைகளையும் வாக்குறுதிகளையும் மறந்துவிடாமலும் அவற்றின்மீது நம்பிக்கை இழந்துவிடாமலும் இருக்க எமக்கு அருள்தாரும் . ஆமென்.

**முதல்:** தோமாவின் நம்பிக்கை வழியாய் எமது நம்பிக்கையை வலுப்படுத்திய உயிர்த்த கிறிஸ்துவே
**எல்:** எங்கள்மேல் இரக்கமாயிரும்
**முதல்:** பரலோகத்தில் இருக்கின்ற . . . தந்தைக்கும் . . .

**நிலை 9: கவலையுணர்ந்த கிறிஸ்து**

**யோவா 21:1-19: திபேரியா கடலில் தோன்றுகிறார் இயேசு**

தங்களது வாழ்வும் எதிர்காலமும் குறித்து கவலையோடிருந்த சீடர்களின் கவலையுணர்ந்து அவர்களது வாழ்வில் மீண்டும் நுழையும் உயிர்த்த கிறிஸ்துவை தியானிப்போம்.

**செபம்:** மீன் அகப்படாமல் தவித்த சீடர்களுக்கு உமது உடனிருத்தலாலும், வழிகாட்டுதலாலும் பெருமளவு மீன் கிடைக்கும் படியாக செய்தீரே, எங்கள் அன்றாட வாழ்வின் சூழல்களில் உற்சாகம் இழக்காமலும், உழைப்பில் சளைக்காமலும் இருக்க உம்மை மையப்படுத்திய வாழ்க்கை வாழவும், உம் உடனிருப்பை உணர்ந்து வாழவும் அதையே அடுத்தவரோடு பகிர்ந்துகொள்ளவும் வரம் தாரும். ஆமென்.

**முதல்:** தேடிச்சென்று உம் சீடர்களை உறுதிப்படுத்திய உயிர்த்த கிறிஸ்துவே
**எல்:** எங்கள்மேல் இரக்கமாயிரும்
**முதல்:** பரலோகத்தில் இருக்கின்ற . . . தந்தைக்கும் . . .

**நிலை 10: திருச்சபையை உருவாக்கும் கிறிஸ்து**

**யோவா 21: 15-18: பேதுருவின் முதன்மை பொறுப்பை உணர்த்துகிறார் இயேசு**

"என் ஆடுகளை மேய்" என்று பேதுருவை பணித்து திருச்சபையை ஒருடலாய் உருவாக்கும் உயிர்த்த கிறிஸ்துவை தியானிப்போம்.

**செபம்:** சிதறிப்போன ஆடுகளாய் இருந்த தன் சீடர்கள் அனைவரையும் ஒரு மந்தையாய் கூட்டிச்சேர்க்கும் பணியை பேதுருவிடம் ஒப்புக்கொடுத்த உயிர்த்த கிறிஸ்துவே, எம் திருச்சபையை எமது நம்பிக்கை வளரும் இல்லம் என்பதை உணர்ந்து ஒருவரையொருவர் அன்பு செய்யவும், ஒற்றுமையும், ஒருமனப்பாட்டையும் வளர்க்கவும் எம்மால் முடிந்ததை செய்யும் ஆற்றல்தாரும். ஆமென்.

**முதல்:** திருச்சபையை ஒரு குடும்பமாய் தோற்றுவித்த உயிர்த்த கிறிஸ்துவே
**எல்:** எங்கள்மேல் இரக்கமாயிரும்
**முதல்:** பரலோகத்தில் இருக்கின்ற . . . தந்தைக்கும் . . .

**நிலை 11: அனுப்புகிறவராம் கிறிஸ்து**

**மாற்கு 16: 15-18: உலகெங்கும் தம் சீடரை அனுப்புகிறார் இயேசு**

உலகெங்கும் போய் நற்செய்தியை அறிவியுங்கள் என்று தனது சீடர்களுக்கு புதியதொரு பணியை தந்து

அனுப்புகிறவராம் உயிர்த்த கிறிஸ்துவை தியானிப்போம்.

**செபம்:** உம் மீட்பு உலகனைத்திற்கும் சென்றுச்சேர திருவுளமான எம் இறைவனே, உம் சீடர்களுக்கு நீர் அன்று அளித்த இப்பணி, திருமுழுக்கிலே உம்மில் இணையும் எங்கள் ஒவ்வொருவருக்கும் நீர் தந்துள்ள பணி என்பதை நாங்கள் உணரவும், உமது உயிர்ப்பினால் உந்தப்பட்டு எம் வார்த்தையாலும் வாழ்வாலும் உமது நற்செய்தியை அறிவிக்கும் துணிச்சல் தாரும். ஆமென்.

**முதல்:** நற்செய்தி அறிவிக்கப்பட வேண்டும் என திருவுளமான உயிர்த்த கிறிஸ்துவே
**எல்:** எங்கள்மேல் இரக்கமாயிரும்
**முதல்:** பரலோகத்தில் இருக்கின்ற . . . தந்தைக்கும் . . .

**நிலை 12: விண்ணேறும் கிறிஸ்து**

**லூக் 24: 50-52: விண்ணகம் எழுகிறார் இயேசு**

நான் என் தந்தையிடம் செல்லுகிறேன் என்று கூறி நமக்காய் தந்தையின் வலப்பக்கம் வீற்றிருக்கும் உயிர்த்த கிறிஸ்துவை தியானிப்போம்.

**செபம்:** எல்லாம் நிறைவேறிற்று என்ற நிறைவோடு தந்தையின் வலப்பக்கம் விண்ணேறி வீற்றிருக்கும் உயிர்ப்பின் ஆண்டவரே, உம் தந்தையின் திருவுளத்தை சிரமேற்கொண்டு மரணமே வந்தாலும் செய்துமுடிக்கும் மனவுறுதியோடு வாழ்ந்தீரே, நாங்களும் எம் வாழ்வில் தந்தையின் சித்தமறிந்து அதை நிறைவேற்றிடும் ஆவலோடு வாழும் வரம்தாரும். ஆமென்.

**முதல்:** விண்ணேற்றமடைந்த உயிர்த்த கிறிஸ்துவே
**எல்:** எங்கள்மேல் இரக்கமாயிரும்
**முதல்:** பரலோகத்தில் இருக்கின்ற . . . தந்தைக்கும் . . .

**நிலை 13: காத்திருக்கும் கிறிஸ்தவர்கள்**

**திப. 1: 12-14: அன்னை மரியாளோடு ஆவிக்காய் காத்திருக்கின்றனர் சீடர்கள்**

கிறிஸ்துவின் பணி முடிந்து தங்கள் பணி தொடங்கவுள்ளதை அறிந்து கிறிஸ்துவின் கட்டளைக்காய் காத்திருக்கும் முதல் கிறிஸ்தவர்களாய் அன்னை மரியாளையும் சீடர்களையும் தியானிப்போம்.

**செபம்:** நான் உங்களுக்கு ஓர் துணையாளரை அனுப்புவேன் என்று கூறிச்சென்ற உயிர்த்த கிறிஸ்துவே, உம் ஆவிக்காய் காத்திருக்கும் அன்னையையும் சீடர்களையும் கண்டு உம்மை போற்றுகின்றோம். அவர்களைப் போலவே உமது வார்த்தையில் முழு நம்பிக்கை கொண்டு, உம் ஆவியின் வரங்களுக்காக ஏங்கும் மனதை எங்களுக்குத் தாரும். ஆமென்.

**முதல்:** ஆவியை வாக்களித்த உயிர்த்த கிறிஸ்துவே
**எல்:** எங்கள்மேல் இரக்கமாயிரும்
**முதல்:** பரலோகத்தில் இருக்கின்ற . . . தந்தைக்கும் . . .

**நிலை 14: அருள் வழங்கும் ஆவியாய்**

**திப. 2: 1-42: வாக்களிக்கப்பட்ட ஆவியை அனுப்புகிறார் இயேசு**

சீடர்களோடும் மரியன்னையோடும் இதுவரை உடன் நடந்த கிறிஸ்து உயிர்த்த தம் மகிமையில் அருள்வழங்கும் ஆவியாய் அவர்கள்மீது இரங்கியதை தியானிப்போம்.

**செபம்:** ஆவியிலும் உண்மையிலும் வழிபட எம்மை அழைக்கும் உயிர்ப்பின் ஆண்டவரே, அருள் வழங்கும் ஆவியை எம்மீது நிறைவாய் பொழிந்தருளும். எமது வாழ்வே ஒரு நற்செய்தி அறிவிப்பாய் அமைந்து, உமது உயிர்ப்பின் ஒளியை எம்முள் கொண்டு, அதே ஒளியின் பாதை வழி நடந்து பிறரையும் வழிநடத்த வரம் தாரும். ஆமென்.

**முதல்:** ஆவியை எமக்காய் அனுப்பும் உயிர்த்த கிறிஸ்துவே
**எல்:** எங்கள்மேல் இரக்கமாயிரும்
**முதல்:** பரலோகத்தில் இருக்கின்ற . . . தந்தைக்கும் . . .

**முடிவுரை**

ஒளியின் மக்களாய், ஒளிவீசும் மக்களாய், ஒளியின் சாட்சிகளாய், ஒளியேற்றும் திருச்சபையாய் ஒன்றுப்பட்டு உயிர்த்த கிறிஸ்துவின் வழி நடப்போம்.

திருத்தந்தையின் கருத்துக்களுக்காக செபிப்போம்.
பரலோகத்தில்... அருள்நிறைந்த... தந்தைக்கும்...

## விடுமுறை விவிலியப் பள்ளி (VBS): சில ஆலோசனைகள்

திரு. விக்டர்

நமது கிறிஸ்தவ வாழ்வின் அடித்தளம் "திருவிவிலியம்" திருவிவிலியத்தைத் தவிர, வேறொரு அடித்தளத்தை யாரும் போட இயலாது என்று புனித பவுல் கூறுகிறார். (கலா 1:8) ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் போதனை, அவரது சீடர்களின் போதனையாகிய பாறையில் அடித்தளம் அமைத்து நமது விசுவாச கட்டிடம் எழுப்பப்பட வேண்டும். (எபே 2:20) காற்று வீசலாம், புயல் மழை வரலாம், பெருவெள்ளம் வரலாம் ஆனால் அது அசைவுறாது (மத் 7:25) இப்படி ஒரு வலிமையான விசுவாச அடித்தளத்தை அமைத்துத் தருவதுதான் "விடுமுறை விவிலிய பள்ளி" ஆகும்.

இன்று நான் உனக்குக் கட்டளையிடும் வார்த்தைகள் உன் உள்ளத்தில் இருக்கட்டும். நீ அவற்றை உன் பிள்ளைகளின் உள்ளத்தில் பதியுமாறு சொல் (இச 6:6,7) இப்பணியை விடுமுறை விவிலிய பள்ளி VBS சிறப்பாக செய்கிறது. ஆடல், பாடல், கதைகள், விளையாட்டு, கலை நிகழ்ச்சிகள் மூலம் திருவிவிலியத்தைக் கற்பதால், இறையாட்சியின் உண்மைகளும், மதிப்பீடுகளும் சிறார்களின் மனதில் எளிதில் பதியவைக்க முடிகிறது. கலைவழியில் இறைவனை அறிந்துக்கொள்ளும் இடமாக விடுமுறை விவிலிய பள்ளி VBS செயல்படுகிறது. இறையரசை நோக்கிய ஆன்மீக பயணத்திற்கு இது பெரிதும் உதவி செய்கிறதாக இருக்கிறது.

**VBS நடத்துவதற்கு அடிப்படை தேவை 3:**

1. VBS நடத்தத் தேவையான இடம்
2. VBS ல் பயிலும் மாணவர்கள்
3. VBS ஐ நடத்தும் ஆசிரியர்கள்

**முதல் தேவை - இடம்:** நமது பங்குகளில் உள்ள பள்ளியிலோ, சமூகக் கூடமோ, ஆலயத்திலோ அல்லது மரத்தடியிலோ எங்கு வேண்டுமானாலும் நடத்தலாம்.

**இரண்டாம் தேவை - மாணவர்கள்:** VBSல் பயிலும் மாணவ மாணவியரின் பெயர்களை முன்னதாகவே வகுப்பு வாரியாக கணக்கு எடுத்து வைத்துக் கொள்ள வேண்டும். அன்பிய பொருப்பாளர்கள் மூலம் இதை எளிதில் செய்துவிட முடியும். கத்தோலிக்கர் மட்டுமல்லாது மற்ற சபையாரும், மாற்று மதத்தினரும் இப்பள்ளியில் பயிலலாம்.

**மூன்றாவது தேவை - ஆசிரியர்கள்:** திரு விவிலியத்தின்மீது ஆர்வமுள்ள யாவரும் VBS ஆசிரியராய் இருப்பதற்கு தகுதியானவர்களே. ஆசிரியர்கள், அரசு அலுவலர்கள், படித்து முடித்த அல்லது படித்துக்கொண்டிருக்கும் இளைஞர்/இளம் பெண்கள், பக்த சபையினர், குடும்பப் பெண்கள் இப்படி யார் வேண்டுமானாலும் VBS ஆசிரியராக பணியாற்றலாம். ஒரு VBS பள்ளிக்கு குறைந்தபட்சம் 5 ஆசிரியர்கள் இருப்பது அவசியம். நான்கு வகுப்புகளுக்கு 4 ஆசிரியர்கள், ஆடல், பாடல், விளையாட்டு இவற்றை கற்றுக் கொடுக்க ஒரு ஆசிரியர் என குறைந்தபட்சம் 5 பேர் இருப்பது அவசியம்.

VBS பள்ளியின் ஆசிரியர்கள் திருவிவிலியத்தைப் பற்றிய தெளிவு குறைந்த பட்சமாவது தெரிந்திருக்க வேண்டும். மேலும் அதை கற்றுக் கொடுக்கும் ஆர்வமுடையவராக இருப்பது அவசியம்.

VBS பள்ளியின் ஆசிரியர்கள் "திருவிவிலியத்தை" தினந்தோறும் வாசித்து, தியானித்து செபிக்கிறவர்களாக இருப்பது நல்லது. இறையனுபவம் இல்லாமல் இறைவார்த்தையை தகுந்த விதத்தில் கற்றுக் கொடுக்க முடியாது. ஏனெனில் உள்ளத்தின் நிறைவினின்றே வாய் பேசும் (மத் 12: 34) என்று இயேசு கூறியுள்ளார்.

மேலே கூறப்பட்ட குறைந்தபட்ச தகுதிகளோடு VBS ஆசிரியர்கள் அமைவார்கள் என்றால் அந்த VBS சிறப்பாக இயங்கும் என்பதில் சந்தேகம் இல்லை.

**VBS வகுப்பு: ஒரு VBS பள்ளியை நான்கு குழுக்களாக பிரிக்கலாம்.**

| | | |
|---|---|---|
| **முதல் குழு:** | ஆர்வ நிலை | UKG முதல் 1, 2 வகுப்புகள் |
| **இரண்டாம் குழு:** | தொடக்க நிலை | 3,4,5 வகுப்புகள் |
| **மூன்றாம் குழு:** | இயலா நிலை | 6,7,8 வகுப்புகள் |
| **நான்காம் குழு:** | முது நிலை | 9,10,11 வகுப்புகள் |

இந்த குழுக்களின் நிலைகளுக்கேற்ப பாடத்திட்டங்களும், பயிற்சி ஏடுகளும் ஆசிரிய கையேடுகளும் மறைமாவட்ட அளவில் தயாரித்து வழங்கப்படுகிறது.

**VBS பள்ளியின் கால அட்டவணை:** வழக்கமாக VBS பள்ளி 10 நாட்களுக்கு நடக்கும். "மே" மாதம் முதல் தேதி முதல் "மே" மாதம் பத்தாம் தேதிவரை நடக்கும்.

**ஒரு நாளுக்கான கால அட்டவணை:**

| | | |
|---|---|---|
| **காலை:** | 9.00 | ஆசிரியர் செபம் செய்தல் |
| | 9.15 | பொதுவான பாடல் பயிற்சி |
| | 9.45 | மாணவர், கூடி செபித்தல், ஒன்றுக்கூடல் நடத்துதல் |
| | 10.00 | குழு பாடவேளை |
| | 10.45 | தேநீர் இடைவேளை, ஏதாகிலும் சிற்றுண்டி தருவது சிறப்பாக இருக்கும் |
| | 11.00 | குழு பாடவேளை, இதில் மாணவர் பயிற்சி புத்தகம் எழுதுதல், வண்ணம் தீட்டுதல், மற்றும் பல |
| | 11.45 | குழுக்களின் விளையாட்டு பொதுவாக குழுக்களாக விளையாடும் விளையாட்டை தேர்வு செய்யவும் |
| **மதியம்:** | 12.15 | பாடல் பயிற்சி அனைவருக்கும் |
| | 12.30 | தொடர்கதை, நிறைவு செபம், ஆசிரியர் திறனாய்வும் திட்டமிடுதலும் |

வகுப்புகளில் ஆடல், பாடல், விளையாட்டு, வண்ணம் தீட்டுதல், மனப்பாடம் ஒப்புவித்தல், நாடகம் என அனைத்து சாதனங்களையும் பயன்படுத்தி பிள்ளைகளின் உற்சாகத்திற்கு குறைவில்லாமல் பார்த்துக் கொள்ள வேண்டும். ஒரு (VBS) வகுப்புக்கு வந்த பிள்ளைகள் அடுத்த நாளும் வரவேண்டும் என்கிற ஆர்வத்தை ஊட்டுகிற இடமாக வகுப்புகள் மாற வேண்டும்.

ஆடல், பாடல், விளையாட்டு, நாடகம் எதுவாயிருந்தாலும் (VBS) பள்ளியில் நடப்பதில் அது "திருவிவிலியம்" சார்ந்ததாகவே இருக்க வேண்டும். தனி ஒருவனுடைய திறமைக்கு முக்கியத்துவம் தராமல் குழு விளையாட்டுக்கும், குழு நடனத்திற்கும், குழு நாடகங்களுக்குமே முக்கியத்துவம் தரவேண்டும். அப்பொழுதுதான் மாணவ மாணவியர் சமூகம் சார்ந்த சிந்தனையுடையவராக, பிறரையும் மதிக்கிற, ஏற்றுக்கொள்கிற மனப்பான்மையுடையவராக வாழ பழகுவர். இதற்கென்று ஒரு ஆசிரியர் குழுவை ஏற்படுத்தி திருவிவிலியம் சார்ந்த விளையாட்டு, பாடல், ஆடல், நடனம் இவற்றைத் திட்டமிட்டு தயாரித்து வைத்துக் கொள்வது நல்லது. அது மிகமிகஅவசியம்.

வகுப்பு பாடங்களை நிழல் படங்கள் மூலம் கதை சொல்லாமல் அட்டைகளில் வரைந்து வைத்து கதையை விளக்கி பாடம் நடத்தலாம். குச்சி மனித உருவங்களை கரும்பலகையில் வரைந்தும் கதை சொல்லலாம். பாடத்திற்கேற்ற பாடல்களைப் பாடி பிள்ளைகளை நடிக்கச் செய்தும் பாடம் நடத்தலாம். விவிலியச் சம்பவங்களை அல்லது உவமைகளை நடித்துக் காட்டச் செய்து பாடம் நடத்தலாம்.

நிறைவு நாளன்று ஒரு கலை நிகழ்ச்சியை ஏற்பாடு செய்து பங்கு அளவில் எல்லோருக்கும் அறிவித்து விழா நடத்தலாம். இது மாணவருக்கு உற்சாகத்தையும் பெற்றோருக்கு மனமகிழ்ச்சியையும் தரும். VBS நடக்கும் 10 நாட்களில் ஒரு நாள் இன்பச் சுற்றுலா அழைத்துச் செல்வது சிறப்பாகும்.

மேலே கூறப்பட்ட யாவும் VBS சிறப்பாக நடக்க ஒரு சில ஆலோசனைகள் மட்டுமே. இவற்றோடு தங்களது கற்பனைகளையும், திறமைகளையும் இணைத்து VBS நடத்தும்போது அது மிகச் சிறப்பானதாக அமையும் என்பதில் ஐயமில்லை. செபிப்போம், ஒன்றிணைவோம், உழைப்போம், உயர்வோம் வாரீர்...

## திருச்சபை செய்திகள்

சகோ. சுரேஷ் இயேசுபாலன் சச.

1. "நம்பிக்கையின் குரல்கள்" என்ற தலைப்பில் வத்திக்கானில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த ஒரு பன்னாட்டுக் கருத்தரங்கில் கலந்துக்கொண்ட அருள்பணி மேனம்பரம்பில் அவர்கள் ஆசிய செய்திக்கு அளித்த பேட்டியில் இவ்வாறு கூறினார். சலேசிய சபையைச் சார்ந்த துறவிகள், ஒவ்வோர் ஆண்டும், இந்தியாவில் நூற்றுக்கணக்கான சிறுமியரை, சிறார் தொழில் மற்றும் சிறார் திருமணம் என்ற கொடுமைகளிலிருந்து காப்பதாக இந்திய சலேசிய அருள்பணியாளர் ஜார்ஜ் மேனம்பரம்பில் அவர்கள் கூறினார். வளர் இளம்பருவ மற்றும் சிறார் திருமணம் சட்டத்தால் தடை செய்யப்பட்டிருந்த போதிலும், இந்தியாவில் ஒன்றரைக் கோடி பெண்கள் இன்னும் இத்தகையக் கொடுமைகளுக்கு உள்ளாகின்றனர் என்று அருள்பணி மேனம்பரம்பில் அவர்கள் தன் பேட்டியில் எடுத்துரைத்தார்.
2. பிறரன்பு மறைப்பணியாளர்கள் சபை ஏடன் நகரில் பணியாற்றி வந்த முதியோர் இல்லத்தில் நடத்தப்பட்ட தீவிரவாத தாக்குதலில், நான்கு அருள் சகோதரிகள் உட்பட 16 பேர் கொல்லப்பட்டுள்ளனர். இந்த அருள்சகோதரிகளில் ஒருவரான ஆன்செல்ம் அவர்கள், இந்தியாவின் ஜார்க்கண்ட் மாநிலத்தின் கும்லா மறைமாவட்டத்தைச் சேர்ந்தவர். ஏமனின் நிலைமை எப்படியிருந்தாலும் ஏழைகள் மற்றும் தேவையில் இருப்போர்க்குத் தங்கள் சபை தொடர்ந்து பணியாற்றும் என்று, அருளாளர் அன்னை தெரசா அவர்கள் ஆரம்பித்த பிறரன்பு மறைப்பணியாளர்கள் Missionaries of Charity சபை கூறியுள்ளது. அவர்களது ஆன்ம குருவாக இருந்த சலேசிய குரு அருட்பணி. டாம் சச., அவர்கள் கடத்தப்பட்டுள்ளார். அவரைப்பற்றி தகவல் ஏதும் தெரியவில்லை.
3. வருகிற கிறிஸ்து உயிர்ப்புப் பெருவிழாவன்று கத்தோலிக்கத் திருஅவையில் சேர்வதற்காக 1,127 பேர், சிங்கப்பூர் உயர்மறைமாவட்டத்தில் தயாரிக்கப்பட்டு வருகின்றனர். கிறிஸ்தவரல்லாத 498 பேரும், கத்தோலிக்கத் திருஅவையோடு இணைய விரும்பும் 68 கிறிஸ்தவரும் சிங்கப்பூர் உயர்மறைமாவட்ட கிறிஸ்து அரசர் ஆலயத்தில் தயாரிக்கப்பட்டு வருகின்றனர் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. அதேபோல் சகாய அன்னை ஆலயத்தில் கிறிஸ்தவரல்லாத 393 பேரும், கத்தோலிக்கத் திருஅவையோடு முழுவதுமாக இணைய விரும்பும் 33 பேரும் தயாரிக்கப்பட்டு வருகின்றனர். கத்தோலிக்க திருஅவையில் சேர்கிறவர்களின் எண்ணிக்கை, கடந்த ஆண்டைவிட இவ்வாண்டு 17 விழுக்காடு அதிகம் என்று, சிங்கப்பூர் பேராயர் வில்லியம் கோ அவர்கள் கூறினார்.

4. கடந்த ஒன்பது ஆண்டுகளில் உலகில் திருமுழுக்குப் பெற்ற கத்தோலிக்கரின் எண்ணிக்கை 14.1 விழுக்காடு அதிகரித்துள்ளது. அதே காலத்தில், உலக மக்கள் தொகை 10.8 விழுக்காடு அதிகரித்துள்ளது என்று, Annuario Pontificio 2016ல் கூறப்பட்டுள்ளது.

5. இந்திய ஆயர் பேரவையின் 32வது நிறையமர்வுக் கூட்டத்தில் பல்சமய உரையாடல் முக்கிய கருத்தாகப் பேசப்பட்டது என்று ஆயர் பேரவையின் செய்திக் குறிப்பொன்று கூறுகிறது. மார்ச் 2, கடந்த புதன்கிழமை முதல் மார்ச் 9 முடிய பெங்களூரு, தூய ஜான் மருத்துவமனை வளாகத்தில் நடைபெற்ற இந்திய ஆயர் பேரவையில் பல்சமய உரையாடலை வலியுறுத்தி பல்சமய அறிஞர்கள் உரை வழங்கினர். சிறுபான்மை சமூகங்களுக்கு எதிராக இந்தியாவில் தற்போது நிலவிவரும் பகைமை உணர்வுகளைக் களைவதற்கு உரையாடலே சிறந்த வழி என்பது முக்கியக் கருத்தாக முன்வைக்கப்பட்டது.

6. சலேசிய சபையைச் சார்ந்த முன்னாள் ஷில்லாங் ஆயர் Stephen Ferrando அவர்களை இறையடியார் என்ற நிலைக்கு உயர்த்தியுள்ளார் திருத்தந்தை பிரான்சிஸ். இதுமுதல் அவரது பரிந்துரையை நாடி விசுவாசிகள் செபிக்கலாம், அவ்வாறு நடைப்பெறும் புதுமையால் அவர் அடுத்து அருளாளர் நிலைக்கு உயர்த்தப்படவேண்டும்.

## திருத்தந்தை இரண்டாம் ஜான்பால் போற்றிய
# இரக்கத்தின் ஆண்டவர் பக்தி

பணி. அந்தோணி கிறிஸ்டி

இறையிரக்கத்தின் ஆண்டில் பயணித்துக் கொண்டிருக்கும் நமக்கு இம்மாதம் ஒரு சிறப்பான மாதமாக அமைய பல காரணங்கள் உள்ளன. அவற்றிலே ஒரு சிறப்பான காரணத்தை இங்கு காண்போம். இம்மாதம் இரண்டாம் தேதி இரக்கத்தின் ஆண்டவரின் திருவிழாவை கொண்டாடுகிறோம். இவ்விழா இயேசு கிறிஸ்துவின் இரக்கத்தை நமக்கு முன்னிறுத்தும் விழாவாக அமைகிறது. அருட்சகோதரி பவுஸ்தீனா அவர்களுக்கு பிப்ரவரி 1931 முதல் 1938ல் அவர் மறைந்தது வரை இறையேசு இரக்கத்தின் அரசராய் காட்சி தந்து தனது இரக்கத்தை மக்களுக்கு எடுத்துச்சொல்லவும் இரக்கத்தின் அரசராக தான் தோன்றிய காட்சியை படமாக வரைந்து அதை குறித்து ஒரு பக்தியை தோற்றுவிக்கவும் வலியுறுத்தினார். அதன்படி 1934ல் தான் கண்ட காட்சியை அருட்சகோதரி விவரிக்க கசிமிராவ்ஸ்கி என்னும் ஓவியர் அதை வரைந்தார். 1935 பெரிய வெள்ளியன்று இறையேசுவே காட்சியில் அவருக்கு சொன்னதற்கிணங்க இவ்வுருப்படமும் இதன் பக்தி முயற்சியும் பரவலாக்கப்பட்டது.

இறையிரக்கத்தின் முகம் இயேசு என்று நமது திருத்தந்தை நமக்கு முன்னிருத்தும் இவ்வாண்டிலே தன்னையே இரக்கத்தின் அரசராக வெளிப்படுத்திய இறையேசுவை குறித்து நாம் சிந்திப்பதும், அவரது திருவிழாவை கொண்டாடுவதும் சாலச்சிறந்ததாகும். இவ்விழா ஏன் இம்மாதம் கொண்டாடப்படுகிறது என்பதை நாம் அறிந்துக்கொள்ள வேண்டாமா?

அருட்சகோதரி பவுஸ்தீனாவின் அருள் வாழ்வு அனைவருக்கும் தெள்ளத்தெளிவாய் தெரிந்த ஒன்றாய் இருந்தது. அவரது காட்சிகளும் அதன் மூலமாய் கிடைத்த வெளிப்பாடுகளும் கத்தோலிக்க நம்பிக்கையை பன்மடங்கு ஆழப்படுத்தியுள்ளது. இறையிரக்கத்தின் முகத்தை நமக்கு ஆழமாய், அழகாய் படம்பிடித்து காட்டியுள்ளது. இவற்றை முன்னிருத்தியே திருச்சபை இச்சகோதரியின் புனிதத்தை ஐயம் ஏதுமின்றி ஏற்றுக்கொண்டது. 1993ம் ஆண்டு இச்சகோதரியை அருளாளர் பவுஸ்தீனா கோவால்ஸ்கா என்ற உயர் நிலைக்கு ஏற்படுத்திய திருத்தந்தை இரண்டாம் ஜான் பால் அவர்களே ஏப்ரல் 30, 2000 அன்று அவர்களை புனித பவுஸ்தீனா என்ற நிலைக்கு உயர்த்தினார். அந்த நிகழ்ச்சியிலேயே ஓர் அரிய அறிவிப்பையும் தந்தார். அந்த அறிவிப்பின் படியே 2000வது ஆண்டு முதல் உயிர்ப்பு ஞாயிறை தொடர்ந்து வரும் ஞாயிறு இறை இரக்கத்தின் ஆண்டவரின் ஞாயிறாக கொண்டாடப்படுகிறது.

தீவெஸ் இன் மிசெரிகோர்தியா (Dives in Misericordia), "இரக்கத்தில் மிகுந்தவர்" என்ற சுற்று மடலை எழுதி இன்று நாம் கொண்டாடும் இறை இரக்கத்தின் ஆண்டிற்கான முதற்புள்ளியை 1980ம் ஆண்டிலேயே வைத்தப் பெருமை திருத்தந்தை இரண்டாம் ஜான் பால் அவர்களையே சாரும்.

அது மட்டுமன்றி இறையிரக்கத்தின் ஆண்டவர் ஞாயிறை ஏற்படுத்தி நமது நம்பிக்கையில் இரக்கத்தின் இடத்தை அடிகோடிட்ட திருத்தந்தையும் அவரே. வத்திக்கான் தூய பேதுரு ஆலயத்திற்கு மிக அருகே உள்ள தூய ஆவியார் ஆலயத்தில் ஒரு சிறப்பு பீடம் அமைந்துள்ளது. அங்கு வைக்கப்பட்டுள்ள இறையிரக்கத்தின் ஆண்டவரின் பெரியதொரு திருவுருவப்படம் திருத்தந்தை இரண்டாம் ஜான் பால் அவர்களால் நிறுவப்பட்டது. அங்கு இன்றும் ஒவ்வொரு நாளும்

மதியம் 3மணியிலிருந்து மாலை 5.30மணிவரை இறையிரக்கத்தின் ஆராதனை, புனித பவுஸ்தீனா அவர்களின் சபையை சார்ந்த ஒரு சகோதரியின் தலைமையிலே நடந்து வருகிறது.

இறையிரக்கத்தின் ஆண்டிலே இறையிரக்கத்தின் அரசராம் இயேசுவின் விழாவை நாம் கொண்டாட நமக்கு வழிவகுத்த பெருமை திருத்தந்தை இரண்டாம் ஜான் பால்அவர்களுடையதே என்று கூறின் அது மிகையாகாது. இரக்கத்தின் திருத்தந்தை என்று அனைவராலும் போற்றப்பட்ட திருத்தந்தை இரண்டாம் ஜான் பால் அவர்களின் பொறுத்தமான வழித்தோன்றல் என்ற விதத்திலே திருத்தந்தை பிரான்சிஸ் ஒரு ஆண்டு முழுவதையுமே இறையிரக்கத்திற்கு அர்ப்பணித்துள்ளார்.

புனித பவுஸ்தீனா, புனித இரண்டாம் ஜான் பால், திருத்தந்தை பிரான்சிஸ் ஆகிய இம்மாமனிதர்களின் ஞானத்தையும், இறையனுபவத்தையும் கண்டுணர்ந்து நமது வாழ்விலும் இறையிரக்கத்தை இன்னும் ஆழமாய் உணர முற்படுவோம்.

## சுடர் வாசகர் போட்டி முடிவுகள் - 21

1. Manudy Thusday, Good Friday, Holy Saturday
2. குழப்பத்தில் இருப்போருக்கு நம்பிக்கையில் தெளிவடையச் செய்தல்
3. உயிர்ப்புக் காலத்தில் கிறிஸ்துவின் உயிர்ப்பையும், அதையொட்டிய நிகழ்வுகளையும், அவை நமக்கு தரும் பாடங்களையும் சிந்திக்க, தியானிக்க 14 நிலைகள் கொண்டது ஒளியின் பாதை.
4. 1142
5. இரட்டை வாழ்வு முறையை
6. 2020ல் ஹங்கேரி நாட்டுத் தலைநகர் புடாபெஸ்ட் நகரில்
7. பெந்தகோஸ்தே திருவிழாவோடு
8. நமது குறைகளிலிருந்தும், கட்டுகளிலிருந்து, நமது எதிர்மறை சிந்தனைகளிலிருந்து, நமது நம்பிக்கையற்ற நிலைகளிலிருந்து, நமது சுயநலபோக்குகளிலிருந்து.
9. அப்பம் பிடுகையில் தன்னையே வெளிப்படுத்துகிறார்.
10. நம்மை பாவத்தின் தளையிலிருந்தும், சாத்தானின் பிடியிலிருந்தும் விடுவிக்க வீர இயேசு கல்வாரி நோக்கி சென்ற விழா.
11. கசால் தெல் மார்போ
12. மூன்றாம் நிலையில்
13. பதினொன்றாம் நிலை
14. விடியல்
15. சீரேனே ஊர் சீமோன்

## சரியான விடையெழுதி பரிசு பெறும் வெற்றியாளர்கள்

1. A. Kevin Prakash, Bagayam, Vellore.
2. A. Arulraj, Vellore
3. K.G. Rosita, Vellore

## அடுத்த சுடரில்

ஏப்ரல் மாத வினா-விடை போட்டி

1. லூக்கா நற்செய்தியில் “உங்கள் மீட்பு காலம் நெருங்கி விட்டது” என்ற வார்த்தை எந்த பகுதியில் உள்ளது?
   பதில் : லூக்கா 16:16
2. “மனிதர்களாகிய உங்களுக்கு கீழ்ப்படிவதை விட ஆண்டவருக்கு கீழ்ப்படிவதே மேல்” யார் கூறிய வார்த்தைகள் ?
   பதில் : இயேசுவின் சீடர்கள்
3. இம்மாத இறையிரக்கத்தின் செயல்பாடாக முன்னிறுத்தப்படுவது யாது?
   பதில்: மன்னிப்பு
4. பார்வையற்ற சிறுமிக்கு உதவிய தூய அன்னை தெரேசாவைப் பார்த்து கூறிய வார்த்தைகள் என்ன?
   பதில் : நீங்கள் யார்? இயேசுவா? அப்படியானால் நான் இயேசுவையும், இயேசுவின் அன்பையும் உணர்ந்தேன்.
5. தூய மாற்கு நிறுவியதாக கூறப்படும் திருச்சபை எது ?
   பதில் : எகிப்தின் அலெக்சாந்திரியா திருச்சபை
6. தூய மாற்குவின் இன்னொரு பெயர் என்று ஆசிரியர் கூறிப்பிடுவது எது?
   பதில் : யோவன் மாற்கு
7. தூய மான்போர்ட் லூயிக்கு புனிதப் பட்டம் அளித்தவர் யார்?
   பதில் : திருத்தந்தை 12ம் பத்திநாதர்.
8. தூய 5ம் பத்திநாதர் வாழ்ந்த காலம் எது?
   பதில் : 1504 முதல் 1572 வரை
9. துருக்கியர்களை வெற்றி கொள்ள 5ம் பத்திநாதர் பயன்படுத்திய செபம் என்ன?
   பதில் : செபமாலை
10. “திருவிவிலியத்தை தவிர வேறு அடிதளத்தை வேறுயாராவது போட முயன்றால் அவன் சபிக்கப்படுவான்” கூறியது யார்?
    பதில் : திருத்தூதர் பவுல்
11. VBS ஆசிரியர்கள் எப்படிபட்டவர்களாக இருக்க வேண்டுமென்று ஆசிரியர் கூறுகிறார்.?
    பதில் : திவிவிலியத்தை தினந்தேறும் வாசித்து, தியானித்து, செபிப்பவர்களாக இருக்க வேண்டும்.
12. இறையிரக்கத்தின் ஆண்டவர் திருவிழா எப்போது கொண்டாடப்படுகிறது?
    பதில்: உயிர்ப்பு ஞாயிறுக்கு அடுத்த ஞாயிறு, 2000வது ஆண்டு நிறுவப்பட்டது.
13. நம்பிக்கையின் குரல்கள் என்ற கருத்தரங்கில் அருள்பணி மேனம்பரம்பில் சலேசிய சபை செய்தியாக எதைக் கூறினார்?
    பதில் : சலேசிய சபையைச் சேர்ந்த துறவிகள், ஒவ்வோர் ஆண்டும் இந்தியாவில் நூற்றுக்கணக்கான சிறுமியரை,சிறார் தொழில் மற்றும் சிறார் திருமணம் என்ற கொடுமைகளிலிருந்து காப்பதாக கூறினார்.
14. இந்திய ஆயர் பேரவையின் 32வது நிறையமர்வு கூட்டத்தின் சிறப்பு கருத்து யாது?
    பதில்: பல்சமய உரையாடல்

15. இறையிரக்கத்தின் ஆண்டவர் படத்தை வரைந்த ஓவியர் பெயர் என்ன?
பதில்: கசிமிராவ்ஸ்கி

## சுடர் வாசகர் போட்டி - 22

**பகுதி -1: வழிபாட்டு வழிகாட்டி**

தூய பிலிப்பு, யாக்கோபு திருத்தூதர்கள்
ஆண்டவரின் விண்ணேற்றம்
புனித பாத்திமா அன்னை
தூய ஆவி பெருவிழா - நவநாள்
தூய ஆவி பெருவிழா
மூவொரு கடவுள் பெருவிழா
தூய மகதலா மரியா
கிறிஸ்தவர்களின் சகாய அன்னை திருவிழா
கிறிஸ்துவின் திருவுடல் திருரத்தம் பெருவிடா
மரியன்னை எலிசபெத்தை சந்தித்த விழா

**பகுதி - 2: விசுவாசத்தில் வளர...**

தூய ஆவியின் கொடைகள்
தூய ஆவியின் கனிகள்
தூய ஆவியின் வரங்கள்
கிறிஸ்தவர்களின் சகாய அன்னை பக்தி

**அன்பு நிறை வாசகர்களே!**

இந்த மாத "சுடர் வாசகர் போட்டி" பதில்களை ஏப்ரல் 20ஆம் தேதிக்குள் அனுப்பி வைக்கவும். சரியான பதில்களை எழுதி குலுக்கல் முறையில் தேர்ந்தெடுக்கப்படும் மூன்று பங்கேற்பாளர்களுக்கு சிறப்பு பரிசுகள் வழங்கப்படும்.
(சரியான முகவரியை குறிப்பிடவும்)

**தீபகச் சுடர்**

அன்பு வாசகர்களே!

மாதம் தவறாமல் ஒரு பிரதிப்பெற ஆண்டு சந்தா ரூ. 100/ செலுத்தி உங்கள் பெயரை பதிவு செய்துக் கொள்ளுங்கள்.

**தீபகம்**
தொன்போஸ்கோ மறைப்பணி மையம்
45, லேண்டன்ஸ் சாலை
கீழ்ப்பாக்கம், சென்னை-600 010.
தொலைப்பேசி: 044-26428162.

பெயர்: ..............................
முகவரி: ..............................
........................................
........................................
........................................
தொலைப்பேசி: ....................